பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 30 வியாழக்கிழமை (13.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 108

# மோசமான மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை அரசைச் சாடுகின்றது அமெரிக்கா!

## தமிழ் இளைஞரே பாதிப்பு என ஆண்டறிக்கையில் தெரிவிப்பு

வாஷிங்டன், மார்ச் 13

**மோசமான மனித உரிமை மீறல்களுக்காக இலங்கையையும் இலங்கை அரசையும் மிகக் கடுமையாகச் சாடியிருக்கின்றது அமெரிக்கா.**

**உலக நாடுகளில் மனித உரிமைகள் பேணப்படும் விதம் தொடர்பான அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் வருடாந்த அறிக்கையிலேயே இலங்கை குறித்து மிகக் காட்டமாக விமர்சிக்கப்பட்டிருக்கின்றது.**

வாஷிங்டனில் வெளிவிவகாரத் திணைக்களத்தில், அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலீஸா ரைஸ் கலந்துகொண்ட ஒரு நிகழ்வில் நேற்றுமுன்தினம் இந்த வருடாந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

இலங்கை தொடர்பான அறிக்கை வாசகங்களில், அது முற்றாகக் கண்டிக்கப்பட்டிருக்கின்றது; காட்டமாக விமர்சிக்கப்பட்டிருக்கின்றது; இலங்கையில் மனித உரிமை பேணும் போக்கும் ஆட்சிமுறையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

"கடத்தல், காணாமற்போதல் போன்ற மோசமான மனித உரிமை மீறல்களில் பாதிக்கப்டோரில் பெரும்பாலும் அனேகமானோர் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஆண்களான இளம் தமிழர்களே!" - என்று அந்த அறிக்கை திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றது.

மனித உரிமை மீறல்களினால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் சிறுபான்மைத் தமிழர்களே என்று சுட்டிக்காட்டியுள்ள அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் அறிக்கை, மனித உரிமைகள் நிலைமை சீர்கெட்டுப் போனமைக்கு இலங்கை அரசே பொறுப்பு என்றும் குற்றம் சுமத்தியிருக்கின்றது.

இலங்கையின் பிரிவினைவாதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளின் அத்துமீறல்களை அந்த அறிக்கை கண்டித்துள்ளது. எனினும் காணாமற்போதல் மற்றும் உரிமை மீறல் விடயங்களைக் கையாளுகின்ற இலங்கையின் ஆட்சிமுறைமை தொடர்பில் தொடர்ச்சியாகவும், அதிகமாகவும் வெளிப்படுத்தப்பட்டு வரும் கண்டனமே அமெரிக்காவுக்கு அதிகம் சிரத்தைக்குரியது என்பதையே அது வெளிப்படுத்தி நிற்கின்றது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபையும் கிழக்கு மாகாண சபையும் ஒரே சமயத்தில் கூடும்

## இந்தியத் தூதுவருக்கு ஜனாதிபதி மஹிந்த விளக்கம்

கொழும்பு, மார்ச் 13

மே மாத நடுப்பகுதியில் அல்லது மூன்றாம் வாரத்தில் நடத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலின் பின்னர் கிழக்கு மாகாணசபை கூடிச் செயற்பட ஆரம்பமாகும்போது வடக்கு மாகாணத்துக்கான இடைக்கால நிர்வாக சபையும் கூடிச் செயற்படத் தொடங்கக்கூடியதாக இருக்கும்.

இத்தகவலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கொழும்புக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத்துக்குத் தாமே நேரடியாகத் தெரியப்படுத்தினார் என்று நம்பகரமாக அறியவந்தது.

கடந்த எட்டாம் திகதி மகளிர் தினத்தன்று தென்னிலங்கையில் தங்காலையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் பங்குபற்றிய பின்னர் அன்று முன்னிரவு ஜனாதிபதி தங்கியிருந்த இல்லத்தில் இந்தியத் தூதுவருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் அந்தரங்கச் சந்திப்பு ஒன்று இடம்பெற்றதாகவும் அக்கலந்துரையாடல் சில மணி நேரம் நீடித்ததாகவும் தெரியவந்தது.

அண்மையில் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டிருந்த இந்தியத் தூதுவர், அங்கு இந்திய உயர் மட்டத்துடன் இலங்கை விவகாரம் குறித்து விரிவாக ஆராய்ந்து உரிய வழிகாட்டுதல்களைப் பெற்றுத் திரும்பியிருந்தார் என்று கூறப்படுகின்றது.

அதன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நடந்த இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், பல குறிப்பிடத்தக்க அம்சங்கள் குறித்து இரு தரப்பினரும் பரஸ்பரம் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மடுவில் நேற்று விமானக் குண்டுவீச்சு

கொழும்பு, மார்ச்.13

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார், மடுவின் கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் விமானப் படையினரின் ஜெற் விமானங்கள் நேற்றுக்காலை 7.30

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு மேயராக பத்மினி நியமனம்



மட்டக்களப்பு, மார்ச்.13

மட்டக்களப்பு மாநகர சபையின் மேயராக திருமதி பத்மினி பிரபாகரனை நியமிப்பது என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி முடிவு செய்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் பேசும் இரண்டாயிரம் பேரை கிழக்கில் பொலிஸில் சேர்ப்பதற்கு முடிவு

கொழும்பு, மார்ச் 13

கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு முழுமையான பொலிஸ் சேவைகளை வழங்கும் நோக்கில் அங்கு தமிழ் மொழி பேசுகின்ற இரண்டாயிரம் பேரை பொலிஸ் சேவையில் இணைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம நேற்றுக் கூறினார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இத்தகவலை வெளியிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புலிகளிடமிருந்து அரசால் மீட்டெடுக்கப்பட்ட கிழக்கில் முழுமையான ஜனநாயகத்தை ஏற்படுத்தவும் அங்குள்ள மக்களுக்கு நல்ல சேவைகளை வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அங்கு சட்ட, ஒழுங்கைப் பேணிப் பாதுகாப்பதற்காக புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இப்போதுள்ள பொலிஸ் நிலையங்கள் பலப்படுத்தப்படு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கதிர்காமர் கொலை வழக்கில் பிரபாகரனுக்குப் பிடியாணை

## கொழும்பு மேல் நீதிமன்றம் பிறப்பிப்பு

கொழும்பு, மார்ச் 12

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கின் பிரதிவாதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட ஆறு பேரை நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருக்கிறது.

2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கும் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் லக்ஷ்மன் கதிர்காமரைக் கொலை செய்வதற்காக கிளிநொச்சியிலும் கொழும்பிலும் சதிசெய்தமை, கொலைக்கு உடந்தையாக இருந்தமை, விநோதன் என்பவரோடு சேர்ந்து கொலைச் செயலை ஒப்பேற்றியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு எம்.பிக்கள் பதின்மூவரிடமும் மதவாச்சியில் படையினர் பெரும் கெடுபிடி!

வவுனியா, மார்ச் 13

வன்னி சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிளிநொச்சியிலிருந்து கொழும்பு திரும்பும் வழியில் ஸ்ரீலங்காப் படையினரின் கடுமையான கெடுபிடிகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன் சுமார் ஒரு மணி நேரம் மதவாச்சி சோதனை நிலையத்திலும் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், படையினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றிருக்கின்றது.

வவுனியா நோக்கி எட்டு வாகனங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 13 பேரும் செவ்வாய்க்கிழமை புறப்பட்டனர். பிற்பகல் 2 மணியளவில் ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடாக வவுனியாவுக்கு வந்த இவர்கள் அங்கிருந்து கொழும்பு வருவதற்காக மதவாச்சிக்கு வந்தபோது மதவாச்சி சோதனைச் சாவடியில் பிற்பகல் 3 மணியளவில் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

மதவாச்சி சோதனைச் சாவடியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பயணம் செய்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச சிவில், அரசியல் உரிமைப் பட்டயம் இலங்கையின் அரசமைப்புக்கு ஏற்புடையதா?

## ஆராய்ந்து முடிவு தருமாறு உயர் நீதிமன்றிடம் ஜனாதிபதி கேட்டுள்ளார்

கொழும்பு, மார்ச் 13

"சிவில், அரசியல் உரிமை தொடர்பான சர்வதேச பட்டயம் இலங்கையின் அரசமைப்புக்கும் ஏனைய சட்டங்களுக்கும் ஏற்புடையதா? இந்தச் சர்வதேசப் பட்டயத்தை இலங்கை ஏற்றுக்கொண்டால், இலங்கைச் சட்டங்களுக்கு முரண்படாத விதத்தில் அதை நடைமுறைப்படுத்த முடியுமா?"

- இந்த விடயம் குறித்து ஆராய்ந்து, முடிவைத் தமக்கு அறிவிக்குமாறு உயர் நீதிமன்றத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.


அரசமைப்பின் 129ஆவது பிரிவின் முதலாம் உப பிரிவின் கீழ் 'ஆலோசனை நியாயாதிக்கம்' என்ற சரத்தின்படி இந்தக் கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர்நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்திருக்கிறார்.

மனித உரிமைகளை இலங்கையில் சிறப்பாகப் பேணுவதற்காக சர்வதேச குடியியல் (சிவில்), அரசியல் உரிமைகள் தொடர்பான பட்டயத்தை இலங்கை முற்றாக நடைமுறைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 ★ 01 ★ 1944

மறைவு 22 ★ 02 ★ 2007

*சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஒய்வு பெற்ற விவசாயியும், சனசமூக நிலைய பொருளாளரும், சமூக சேவகனுமாகிய*

### அமரர் நாகன் வயிரமுத்து

திதி:- 13.03.2008

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே
அன்பின் ஆருயிர்த் தெய்வமே
ஆண்டு ஒன்று சென்றாலும்
எமது நெஞ்சங்களில் அணையாத
ஒளி விளக்காக சுடர்விட்டு
எரிகிறது உங்கள் நினைவுகள்.

*ஆத்மா சாந்தி அடைய இறைவனைவேண்டுகிறோம்.*

(71983)

என்றும் நீங்காத நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பச்சந்தை,
சுழிபுரம் மேற்கு.

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயலஷ்சுமி அரிச்சந்திரன்

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் பின்பு கொழும்பில் டிக்மன்ஸ் றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலஷ்சுமி அரிச்சந்திரன் 11.03.2008 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு அரிச்சந்திரன் (சண்டிலிப்பாய்) அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி விஜயரட்ணம் அவர்களின் மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி முருகேசு தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சீத்தாலஷ்சுமி மற்றும் வாசுகி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற சந்திரதாஸ், ரவீந்திரதாஸ், ரேணுகா, ராதிக்கா, யோகதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஞ்சினி, தம்பித்துரை, கந்தையா, அஜந்தா ஆகியோரின் மாமியாரும், நிமால்ராஜ், நிரோஷன், நிர்மலகாந்தன், தேனுஷா, சங்கீர்த்தனன், விதுஷன், அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.03.2008) வியாழக்கிழமை காலை 8 மணி முதல் பொரளை A.F.Raymonds மலர்ச்சாலையில் அஞ்ச லிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகளின் பின் பிற்பகல் 2 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

*No. 14, 5A Dickman's Court,*
*Dickman Road, Bambalapitiya,*
*Colombo - 04. Tp. 2507486*

தகவல்:
ரேணுகா
(மகள்).

## தவறிவிட்டது

சோமசுந்தரம் சிவாஜி என்பவருடைய தே.அ. அட்டை (503583917V) மானிப்பாயில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

S.சிவாஜி
*மேதேஸ் லேன், மானிப்பாய்.* (71982)

## வேலையாள் தேவை

வீட்டைப் பராமரிப்பதற்கு வேலையாள் தேவை (ஆண்/பெண்) வீட்டில் தங்கியும் இருக்கலாம்.

தொடர்பு: விள.இல. 3072 மே/பா உதயன்

## சிறுகதைத் தொகுதி

**வாசித்தீர்களா?**

**ஓய்வு பெற்ற வங்கியாளர் திரு.சி.குமாரலிங்கம் எழுதிய சிறுகதைத் தொகுதி "செந்தமிழ் நாடெனும் போதினிலே"**

**கிடைக்குமிடம்:**

Progressive Publishing House Ltd.
91, Dr.N.M.Perera mawatha
Colombo - 8

**விலை ரூபா 100 /=**
**தபாற்செலவு ரூபா 50/=**

(71981)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
அருட்சகோதரி ம.மறிஸ்ரெலா
அவர்களின் அன்புத் தந்தை

### பே.அ.மரியாம்பிள்ளை

அவர்கள் (05.03.2008) இறைவனடி சேர்ந்ததையிட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரத்திப்பதுடன் அவர்தம் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
அலுவலர்கள், மாணவர்கள், பாடசாலை
அபிவிருத்திச் சங்கம்
பழைய மாணவர் சங்கம்,
யா/ கரம்பொன் சண்முகநாத ம.வி.,
ஊர்காவற்றுறை,

## மரண அறிவித்தல்கள்

### கோவிந்தர் நல்லம்மா



தொல்புரம் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தர் நல்லம்மா (10.03.2008) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தரின் அன்பு மனைவியும் அரியமலர், நேசமலர் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நல்லபிள்ளை, கந்தசாமி(முன்னாள் களஞ்சியக்காப்பாளர், சங்கானை ப.நோ.கூ சங்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(14.03.2008) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொல்புரம் மத்தி,*
*சுழிபுரம்.*

(71984)

தகவல்:
பிள்ளைகள்,
உறவினர்கள்.

### கிறிஸ்ரியன் யோசப் சத்தியதாசன்



நெடுந்தீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், மடம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்ரியன் யோசப் சத்தியதாசன் (இராஜதுரை) நேற்று (12.03.2008) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்ரியன் - ஆனாசி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சலமொன்-தொம்மாசி ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற ஜேயம்மாவின் அன்புக் கணவரும், மகாராசா, தர்மராசா, காலஞ்சென்ற துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பூரணம் (மிசி), தங்கமுத்து, சலோமை, அந்தோனிப்பிள்ளை, ஆரோக்கியம், தர்மரெட்ணம், குணரெட்ணம், அழகரெட்ணம், பாலசிங்கம், தவமணி, யோகரெ ட்ணம் ஆகியோரின் மைத்துனரும், இராசேந்திரம், இராசாத்தி, அனற், நிக்சன், நிலாணி, டெல்சன், பவானி, றதனி ஆகியோரின் பெரிய தந்தையும், லலிதா, சண், புவனேந்திரன், எட்மன், றயிதா, ஜோண், தர்மே ஷ் ஆகியோரின் மாமனாரும், வினோஜா, சிந்துஜா, செந்தூரன், அஜே, அஜித், விஜய், சஞ்சய், டில்றிஷா, உஷாரா, றூமஸ், மிதுஷாஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (13.03.2008) வியாழக்கிழமை பி.பகல் 3 மணிக்கு இலக்கம் 432/8, மடம் வீதியில் அமைந்திருக்கும் அன்னாரது இல்லத்திலிருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*432/8, மடம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(71985)

தகவல்:
கி.மகாராசா (சகோதரன்).

### திருமதி குமாரசாமி பூபதி

ஐயனார் வீதி, கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி பூபதி நேற்று (12.03.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் குமாரசாமியின் அன்பு மனைவியும், இளங்கோ (சேவாலங்கா-பணிப்பாளர் வடமாகாணம்), மகேந்திரன் (GAG DO-பணிப்பாளர், வவுனியா), சிவஞானசுந்தரம் (றூபா பன்முக வர்த்தக நிலையம்), கணேசமூர்த்தி, பஞ்சகல்யாணி, நித்தியா (USA), மங்கள கல்யாணி (ஆசிரியை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஐயனார் வீதி,*
*கல்வயல், சாவகச்சேரி.*
*060 221 7455*

*(71987)*

*தகவல்:*
குடும்பத்தினர்.

## கேள்வி அறிவித்தல்

1) கீழ்வரும் வேலைக்கான மூடிய கேள்விகள் பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| தொ. இல. | ஒப்பந்த குறியீட்டு இல. | ஒப்பந்த விவரம் | இக்ராட் தரம் | கேள்விப் பிணை | மீளளிக்கப் பாடாத கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | JF/BD/CE/RDHS-VAD/02/2008 | ஆரம்ப சுகாதார நிலையம் நிர்மாணித்தல் வட்டுக்கோட்டை கட்டம் I | M7/C8 | 40.000.00 | 750.00 |

02) கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல கேள்விதாரர்களும் கொண்டிருக்கவேண்டும்.

I) மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிட்ட (ICTAD) தரத்தைக் கொண்டிருந்தல் வேண்டும்

II) ICTADஅறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வித் தகவைக் கொண்டிருந்தல் வேண்டும்

III) முன்னைய வேலைகளில் மோசமான நேர்மையற்ற வெளிப்படுத்தல்களைக் கொண்டிருந்தல் கூடாது.

IV) ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் பதிவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெற முன்னர் ஒப்படைக் கவேண்டும்

V) கேள்விதாரர் VAT பதிவு செய்ததன் பிரதியையோ அல்லது VAT பதிவு செய்யப்படாமைக்கான கடிதத்தை ஆணையாளர், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கவேண்டும்.

03) ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும் கேள்வி ஆவணங்களையும் இலவசமாக அலுவலக நேரத்தில் நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம்(மா), யாழ்ப்பாணம். (தொ.இல.021-222 2634) பரிசீலிக்கமுடியும்.

04) கேள்வி ஆவணங்கள் 14.03.2008 தொடக்கம் 28.03.2008 பி.ப. 1 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணம் (அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு) பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம்(மா), யாழ்பாணத்தில் செலுத்தி நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

05) மூடிய கேள்விகளை தலைவர், பிராந்திய கேள்விச்சபை, பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 31.03.2008 பிற்பகல் 02 மணிக்கு முன்பாக அனுப்பிவைக்க வேண்டும். உடனடியாக கேள்வி திறக்கப்படும். இந்நேரம்ஒப்பந்த காரரோஅல்லது அவர் சார்பில் உரித்தாளிக்கப்பட்டவரோ சமுகமளிக்கமுடியும்.

06) மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்தச் செலவீனங்களுக்கும் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்(மா),
யாழ்ப்பாணம்.

எந்திரி க.குகனேசன்,
தலைவர்,
பிராந்திய கேள்விச்சபை,
யாழ்ப்பாணம்.

(சி/551816)

## அரசாங்க அறிவித்தல்

### பழுதடைந்த உணவுப் பொருள்களுக்கான கூறுவிலை கோரல்

கோண்டாவில், நாவற்குழி I, II அரச உணவுக் களஞ்சியங்கள் மற்றும் இணுவில் லக்ஷ்மி திரையரங்கு ஆகியவற்றில் மனிதப் பாவனைக்கு பயன்படுத்த முடியாத ஆனால் கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்தக்கூடிய பின்வரும் பொருள்கள் காணப்படுகின்றன.

| பொருள் | கோண்டாவில், | நாவற்குழி I, | நாவற்குழி II, | லக்ஷ்மிதிரையரங்கு |
|---|---|---|---|---|
| அரிசி வகை | 18,900 கிலோ | 8,426 கிலோ | 32,259 கிலோ | - |
| கடலை | 495 கிலோ | - | - | 22,574 கிலோ |
| ரவை | - | - | - | 2,650 கிலோ |
| பயறு | - | - | - | 5,632 கிலோ |
| பருப்பு | - | 536 கிலோ | 66 கிலோ | - |
| கோதுமை மா | - | 2,503 கிலோ | 46 கிலோ | - |
| சோயா மா | - | 78 கிலோ | - | - |

இப்பொருள்கள் விற்பனை செய்வதற்கான முத்திரையிடப்பட்ட(Sealed) கூறுவிலைகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது. இப்பொருள்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்புப் பணமாக ரூபா 500.00 உம் மீளளிக்கக் கூடியதான வைப்பாக ரூபா 15000.00 உம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை புனர்வாழ்வுக் கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் 'பழுதடைந்த பொருள்களுக்கான கூறு விலை' எனக் குறிப்பிட்டு 24.03.2008ஆம் திகதி 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு புனர்வாழ்வுப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் சீல்(Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள்.

பொருள்களைப் பார்வையிட விரும்புபவர்கள் அரச உணவுக் களஞ்சியங்களில் வேலைநாள்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை அதற்குரிய களஞ்சியங்களில் பார்வையிடலாம்.

கூறுவிலைகள் 24.03.2008ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்குத் திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளித்திருக்க முடியும்.

பொருள்களை எடுப்பவர்கள் மாவட்டச் செயலக இலங்கை வங்கிக் கிளையில் பணத்தை உடனடியாகச் செலுத்தி பொருள்களை உடனடியாகக் களஞ்சியத்தில் இருந்து அகற்றவேண்டும்.

**கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.**

க.கணேஷ்
அரசாங்க அதிபரும்/ மாவட்ட செயலரும்
யாழ்.மாவட்டம்.

(A)

# கிராமப்புற பாடசாலையாக இருந்தாலும் பல்துறை முன்னேற்றங்கள் கொண்டதாக மிளிர்கிறது கரணவாய் மகாவித்தியாலயம்



பாடசாலையின் அதிபர்
**சிவசிதம்பரம் நற்குணலிங்கம்**

கரணவாய் மகாவித்தியாலயமானது ஆரம்பத்தில் ''கரணவாய் அரசாங்க சிரேஷ்ட பாடசாலை'' என்ற பெயருடன் 1929ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இன்று இப்பாடசாலையானது 340 மாண வர்களையும் 22 ஆசிரியர்களையும் தன்ன கத்தே கொண்ட வகை II பாடசாலையாக இயங்குகின்றது.



பாடசாலைக்கு முன்னால் அணிவகுத்து நிற்கும் 'பான்ட்' வாத்திய அணி

இப்பாடசாலையிலே பயிலுகின்ற மாண வர்கள் ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சை களிலும் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று வருகின்றனர். தரம் 1 தொடக்கம் 11 வரை அமையப்பெற்ற இப்பாடசாலையில் தரம் ஐந்து புலமைப் பரீட்சையிலும் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்து வருகின்றமை குறிப்பிடக்கூடிய விடயமாகவே அமை கின்றது. சித்தியடைந்த மாணவர்கள் எவ ருமே 6ஆம் தரத்திற்காக நகர்ப்புறம் பாட சாலைகளுக்குச் செல்லாது இப்பாடசாலை யிலேயே தொடர்ந்தும் கற்று வருவதானது சிறப்பானதொரு விடயமாகவே அமைவது மட்டுமன்றி அவர்கள் அதிபர், ஆசிரியர்களி டத்தில் கொண்டுள்ள அதிக நம்பிக்கை களையும் அவை எடுத்துக் காட்டுவனவா கவே அமைகின்றது.

'5 S' முறையும் இப்பாடசாலையில் மாண வர்கள் மூலம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. 5 குழுக்களாகப் பிரிக்கப் பட்டு பொறுப்பாக ஓர் ஆசிரியரும் நியமிக் கப்பட்டு சிறப்பாக நடைமுறைப்படுத் தப்பட்டு வருகின்றது. அத்தோடு மாதந் தோறும் கிரம மான முறை யிலே பரீட்சை கள் நடத்தப் பட்டு வருவ தோடு ஒவ் வொரு பாடத் திற்கும் அலகு ரீதியாக அச் சிடப்பட்ட பயிற்சித் தாள் களும் வழங் கப்படுகின் றன. அத்தோடு விடு முறை நாள்களிலும் கூட விசேட வகுப்புகளை யும் மாதிரிப் பரீட்சைகளையும் நடத்துகின்றது. இவற் றினை விட கணனிப் பயிற்சிகளும் வழங் கப்படுகின்றன. மேந்தலை எறியி (Over head Projector) பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறாகவே கல்வியினைச் சிறப்பாக வழங்கிக்கொண்டிருக்கின்ற அதேவேளை மாணவர்களின் ஒழுக்கமும் இறுக்கமா கவே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. மாணவர்கள் ஒருநாள் பாடசாலைக்கு சமூகமளிக்காது விட்டாலும் மறுநாள் பெற் றோருடன் வருகைதந்து தகுந்த காரணங் கள் முன்வைக்கப்பட்ட பின்னரே வகுப் பிற்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றார் கள். இம்முறையினை அதிபர் கையாள்வ தால் பாடசாலைக்கும் மாணவர்களது வரவு குறையாமல் இருக்கின்ற அதேவேளை இடைவிலகல் தன்மையும் குறைவடை கின்றது.

மாணவர்களினது பொது அறிவுத் தன் மையினை அதிகரிக்கும் நோக்குடன் ஒவ் வொரு வகுப்பிலும் வெள்ளைப் பலகை ஒன்று தொங்கவிடப்பட்டு அதிக புள்ளி களைப் பெறுகின்ற மாணவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டு பொது அறிவுத் திற

## மாணவர்களின் சேமிப்பை ஊக்குவிப்பதற்கு மக்கள் வங்கி அலகும் பாடசாலையில் உள்ளது

னானது மாணவர்களிடையே வளர்க்கப் படுகின்றது.

இவ்வாறாக கல்வி மட்டுமன்றி பல் வேறு துறைகளிலும் பயிற்றுவிக்கப்பட்டு மாணவர்கள் வளர்க்கப்படுகின்றனர். கலை, இலக்கியப் போட்டிகளிலும் பங்கு பற்றி வெற்றியீட்டியுள்ளனர். விளையாட்டுத் துறையிலும் தேசிய மட்டம் வரை சென்று பாடசாலைக்குப் பெருமையைத் தேடித் தந்த மாணவர்களும் தற்போது கற்று வருகின்றனர். ஆண்கள், பெண்களுக் கான வலைபந்தாட்ட அணி, கரபந்தாட்ட அணி, கிரிக்கெற் அணி, உதைபந்தாட்ட அணி எனப் பல விளையாட்டு அணிகளை யும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ் அணிகள் கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் என வெற்றிகளைக் குவித்துள் ளமை சிறப்பம்சமாகும்.

அத்துடன் வங்கிகளின் துணையுடன் மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கம் ஊக்குவிக்கப்படுகின்றது. இதற்கு உதார ணமாக நெல்லியடி மக்கள் வங்கிக் கிளை யினரால் சிசு உதான கிளை பாடசாலை யில் உருவாக்கப்பட்டுள்ளது. இவை தவிர பாடசாலை விட்டு விலகிய மாணவர் களின் நலன்கருதி முறைசாராக் கல்விப் பிரிவின் மூலம் மனை முகாமைத்துவப் பயிற்சிநெறியும் இங்கு நடைபெற்று வரு கின்றது.

**கலைச்செல்வன்**

எனவே இவ்வளர்ச்சிக்கெல்லாம் அதி பர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும், பெற் றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், நலன்விரும்பிக ளின் ஒத்துழைப்பும், வடமராட்சிக் கல்வி வலயத்தின் சீரிய செயற்பாடுமே காரணம்.

**இம்மாதம் 10ஆம் திகதி உதயன் 5ஆம் பக்கத்தில் வெளியான கல்விப்புனலில் கோப் பாய் கல்விக் கோட்டத்திலுள்ள உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாட சாலை குறித்த விவரங்களே பிரசுரமாகின. கோப்பாய் றோ.க.த. பாடசாலை எனத் தலைப் புத் தவறாகப் பிரசுரமாகிவிட்டது.**

கல்விப் புனல்



நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியின் மாணவ தலைவிகளுக் கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அருட்சகோதரி ஜெசிந்தாராணி அந்தோனிப்பிள்ளை, நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு.றோய் பேடினன்ட் மற்றும் கல்லூரி ஆசிரியர்களுடன் சின்னம் சூட்டப்பட்ட மாணவிகள் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்: லக்ஸ்மன்)



அல்லாரை ஐங்கரன் முன்பள்ளியில் மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது.

அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ்.மாவட்ட நிர்வாக அலுவலர் சி. இராகவன், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோ ருடன் விழா நாயகர்களான மாணவர்கள் எடுத்துக்கொண்ட படம் இது. (50-207)



சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக வர லாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் மாணவன் ஒருவருக்கு பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம். (50)



சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலையின் கால்கோள் விழா அண்மையில் இடம்பெற்றது.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சு.கனகராசா, பாடசாலை அதிபர், ஆசிரியர் கள் சகிதம் விழா நாயகர்களான தரம் ஒன்று மாணவர்கள் அழைத்துச் செல்லப்படுவ தைப் படத்தில் காணலாம். (50-110)









யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற மற்றும் 25 வருடசேவையைப் பூர்த்தி செய்த ஊழியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினரான யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மற்றும் விவசாய பீடாதிபதி திருமதி சிவச்சந்திரன், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தலைவர் க.நாகஜெயக் குமாரன் ஆகியோர் உரைநிகழ்த்துவதை முதல் மூன்று படங்களிலும் காணலாம்.

ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்குத் துணைவேந்தர் விருது வழங்கிக் கௌரவித்தமையை நாலாவதுபடத்தில் காணலாம். ஐந்தாவது படத்தில் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்.

*(படங்கள்:- லக்ஸ்மன்)*

## இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளை கணனி வலைப்பின்னலுடன் இணைகிறது

யாழ்ப்பாணம்,மார்ச்13

இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளை, வங்கியின் நாடளாவிய கணனி வலைப்பின்னல் சேவையில் 301 ஆவது கிளையாக இணைக்கப்படவுள்ளது.

சேவையின் ஆரம்பவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவி பொதுமுகாமையாளர் பி.ஏ.அருமைநாயகமும் கௌரவ விருந்தினராக வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ந.சிவரட்ணமும் கலந்துகொள்வர். (202)

## யாழ்.பல்கலையில் சுகவாழ்வு விரிவுரை

யாழ்ப்பாணம்,மார்ச்13

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பட்டில் நடத்தப்பட்டுவரும் சுகவாழ்வு விரிவுரையின் தொடர்- III நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்குக் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

மருத்துவ பீடாதிபதி க.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய் மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி என். ஜெயக்குமார் 'புற்று நோய்த் தாக்கமும் அதனை எதிர்கொள்ளலும்' என்னும் தலைப்பில் விரிவுரை நிகழ்த்துவார். (202)

## யாழ்.பொலிஸ் நிலையத்தில் அனுமதி அறிக்கைக்காக விண்ணப்பித்து இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்13

யாழ். பொலிஸ்நிலையத்திற்கு பொலிஸ் அனுமதி அறிக்கைகளுக்காக (பொலிஸ்கிளியரன்ஸ்) விண்ணப்பித்து இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்களை உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு நிலையப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

பொலிஸ் அனுமதி அறிக்கைக்காக வெளிநாடுகள் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து பல நூற்றுக்கணக்கானோர் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு விண்ணப்பித்திருந்தனர்.

அவற்றில் பெரும்பாலானவற்றுக்கு அறிக்கைகள் தயாராக இருந்த போதும் பலர் இதுவரை அவற்றைப் பெற்றுக் கொள்ளாமல் தேங்கிக்கிடக்கின்றன.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார். (அ-202)

## தென்மராட்சி பாடசாலை மாணவர்களுக்கு ஞாயிறன்று இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மார்ச்13

தென்மராட்சி கல்வி வலயமும் சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் இணைந்து தென்மராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச மருத்துவ முகாமினை நடத்தவுள்ளன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இம்மருத்துமுகாம் நடைபெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை குழந்தைகள் பிரிவு வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி கணேசலிங்கம் அருள்மொழி தலைமையிலான 15 வைத்திய கலாநிதிகள் மருத்துவ ஆலோசனைகளை நடத்தி மருந்துகள் வழங்கவுள்ளனர். (202-207)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''தெய்வானை திருமணம்'' எனும் தலைப்பில் இளைப்பாறிய அதிபர் பண்டிதர் க. வேலாயுதம் சொற்பொழிவாற்றுவார். (202-236)

## போட்டி ஒத்திவைப்பு

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகபெண்கள்அணிகளுக்கிடையே இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவிருந்த கிரிக்கெட் போட்டி மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பி.ப.2 மணிக்கு குப்பிளான் விக்னேஸ்வர வி.க. மைதானத்தில் நடைபெறும் என விளையாட்டு அலுவலர் அறிவித்துள்ளார்.


**வீடு வளவு விற்பனைக்கு**

சுன்னாகம் கதிரமலைச்சிவன் கோயிலடியில் 2½ பரப்பு வீடுவளவு விற்பனைக்குண்டு

தொடர்பு: **வே.நவரத்தினம்,**
*கதிரமலைச்சிவன் கோயிலடி,*
*சுன்னாகம்.* (71891)

**வீட்டுடன் காணி விற்பனைதுண்டு**

யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்கச்சேரி பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு மிகவும் அருகாமையில் 65, குருசோ வீதி, சுண்டுக்குளியில் அமைந்துள்ள வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு: S.சிவா 70, குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம், 0774743770.*


## ஈராண்டு நினைவலைகள்

அமரர்

**சின்னையா சின்னத்தம்பி**

மண்ணின் முகிழ்ப்பு
05 ★ 01 ★ 1932

விண்ணில் கலப்பு
06 ★ 03 ★ 2006



ஆண்டுகள் இரண்டு ஆனது அப்பா! -உங்கள்
அன்பு முகம் மறந்ததில்லை
நீங்காத நினைவலைகள் நிழலாய்
என்றும் தொடருதப்பா! -நீங்கள்
காட்டிய வழியில் நாம் சென்று நற்பணி
செய்திடுவோம்-மோட்ச வழி
நீங்கள் சென்று நயம் பெறுவீர்கள் எந்நாளும்

பிரிவால் துயருறும்

*உடுவில் மேற்கு, சுன்னாகம்.* **மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(71969)

## நீங்காத நினைவலைகள்

**12ஆம் ஆண்டு** | **45ஆம் நாள்**



அமரர்
மார்க்கண்டு நவரட்ணம்



செல்வி ஞானமலர்
மார்க்கண்டு (சித்திரா)

| | | | | |
|---|---|---|---|---|
| 02.08.1960 | - | மண்ணில் | - | 31.12.1964 |
| 13.03.1996 | - | விண்ணில் | - | 29.01.2008 |

**மரணித்துப் போன எம் மனிதருள் மாணிக்கங்களே!**
**இவ்அவனிதனை நீங்கள் விட்டு வெகு தூரம் சென்றாலும்**
**பவனிவரும் என்றும் எங்கள் அன்பு நினைவுகள்.**

*குளமங்கால், மல்லாகம்.* (71974) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி இலட்சுமி அம்மாள் சங்கரப்பிள்ளை

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி இலட்சுமி அம்மாள் சங்கரப்பிள்ளை 09/03/2008அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், வன்னிநாயகி, பத்மநாதன், கதிர்காமநாதன், சிவயோகநாதன், தில்லைநாயகி, கணேஷநாதன், இரஞ்சிதநாயகி, காந்திநாயகி, திரிலோகநாதன் ஆகியோரின் அன்புத் தாயும் தர்மலிங்கம், கற்பகம், செல்வரதி, சகுந்தலா, மகேஸ்வரா, வயலட் கணேசலிங்கம், பாலசிங்கம், ஷெரினா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 11.03.2008 செவ்வாய்க்கிழமை ஜெயரத்ன மலர்சாலையில் வைக்கப்பட்டு பின்னர் சகல கிரியைகளுடனும் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்

*30/03/6, கல்பொத்த வீதி,*
*கொட்டாஞ்சேனை, கொழும்பு -13*
T.P. 0112 458164 (71972)

தகவல்:
சி.பத்மநாதன்
(மகன்).

## பரதநாட்டியப் போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடு நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,மார்ச்13

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2008ஆம் ஆண்டிற்கான பரதநாட்டியப் போட்டி பிரதேச, மாவட்ட, மாகாண மட்டத்தில் நடத்தப்படவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பங்குபெற ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பப்படிவத்தினை பிரதேச செயலக கலாசார நிகழ்ச்சித்திட்ட உதவியாளரிடம் பெற்று எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

**போட்டி நிபந்தனைகள்**

✱ *குழு நடனம்* - கீர்த்தனம்/ ஜதீஸ்வரங்கள் பயன்படுத்தலாம்,

6 பேருக்கு மேற்படாதவாறு இருத் தல் வேண்டும்,

14-18 வயதிற்குட்பட்ட இருபாலரும் பங்குபெறலாம்.

நிகழ்வு 10 நிமிடங்களுக்குள் அமைய வேண்டும்.

✱ *தனி நடனம்* - பதம்,

14-18 வயதிற்குட்பட்ட இருபாலரும் பங்குபெறலாம்,

நிகழ்வு 7 நிமிடங்களுக்குள் அமைய வேண்டும்.

நேரடியாகவே பக்கவாத்தியங்களும் பாடல்களும் பயன்படுத்தவேண்டும். போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்குமாறு நல்லூர் பதில் பிரதேச செயலர் சி.ஆ. மோகன்றாஸ் அறிவித்துள்ளார்.

(203)

## வடமராட்சி கிழக்கிற்கான தபால் சேவையை சீர்செய்யுமாறு உ.அ.அதிபர் ஊடாகக் கோரிக்கை

கட்டைவேலி,மார்ச்13


வடமராட்சி கிழக்கில் சில பகுதிகளுக்கான தபால் சேவை சீரற்றுக் காணப்படுகின்றது. சேவையைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச உதவி அரச அதிபர் ஊடாகக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அம்பன், குடத்தனை ஆகிய பகுதிகளிலேயே தபால் விநியோகம் சீரற்றிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இப்பகுதிகளுக்கான தபால் பொதிகள் பருத்தித்துறை தபால் நிலையத்திலிருந்து தாமதமாகவே வந்துசேருவதனால் அவற்றை உரிய காலத்தில் விநியோகம் செய்யமுடியாத நிலை இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்பகுதிகளுக்கான தபால் விநியோகம் உரியகாலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் குறித்து இப்பிரதேச உதவி அரசாங்க அதிபர் எம்.ஸ்ரீஸ்கந்தகுமார் தபால் திணைக்களத்தின் கவனத்திற்கு கொண்டுவரவுள்ளதாகத் தெரிவித்தார்.

(202-275)



நல்லூர் தாய்மார் சங்கம் நடத்திய மகளிர் தின ஒன்றுகூடல் கடந்த சனிக்கிழமை புனித யாக்கோபு ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு, நல்லூர்(ஜே/108) கிராம அலுவலர் திருமதி இ.இராகினி ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதலிரு படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்துகொண்ட தாய்மார்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்தில் காணலாம்.

*(படங்கள்: லக்ஸ்மன்)*

## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு கொமர்ஷல் வங்கியின் அருணலு பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வங்கியின் சாவகச்சேரி கிளையில் நடைபெறவுள்ளது.

பரிசில்களுக்கு தேர்வு செய்யப்பட்ட மாணவர்களை நிகழ்வில் கலந்துகொள்ளச் செய்யுமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(202-207)

## வெவ்வேறு விபத்துச் சம்பவங்களில் தென்மராட்சியில் ஆறுபேர் காயம்

யாழ்ப்பாணம்.மார்ச்13

தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்ற வெவ்வேறு விபத்துச் சம்பவங்களில் ஆறு பேர் காயமடைந்தனர்.

நுணாவில் மேற்கில் இரு சக்கர உழவு இயந்திரத்தை இயக்கிய போது விசிறியைத் தொட்டுப் பார்த்த நா.முகுந்தன் (வயது 7) என்ற பாடசாலை மாணவனும் -

மட்டுவிலில் மின் இணைப்பு வழங்கப்பட்டிருந்த கிரைண்டரின் விசிறி இயங்காததால் அதனை விரலால் இயக்க முற்பட்ட வேளையில் திடீரென விசிறி இயங்கியதால் யோ.இராகுலன் (வயது 21) என்பவரும் தமது விரல்களை இழந்தனர்.

குடையைப் பிடித்த வண்ணம் மோட்டார் சைக்கிளில் அமர்ந்து பயணித்த பெண் தூக்கி வீசப்பட்டு தலையில் காயமடைந்தார். இச்சம்பவம் கெற்பேலியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த த.தவமணி (வயது 43) என்பவர் காயமடைந்தார்.

மினிபஸ் நிறுத்த முன்னர் இறங்கிய பெண் வீழ்ந்து தலையில் காயமடைந்தார்.

சம்பவத்தில் யாழ்ப்பாணம், கச்சேரியடியைச் சேர்ந்த கு.தவமணி (வயது 42) என்பவர் காயமடைந்தார்.

இச்சம்பவங்கள் யாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் வயோதிபரை மினிபஸ் மோதிக் காயப்படுத்தியது.

வீதித் தடை நீக்கப்பட்டதும் வேகமாக வந்த மினிபஸ் சந்தைக்குள்ளிருந்து நடந்து வந்த வயோதிபரை மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாவற்குழி கேரதீவு வீதியைச் சேர்ந்த இளையதம்பி இராசையா (வயது 80) என்பவரே காயமடைந்தவராவார்.

மீசாலைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தருக்கு கால் முறிந்தது.

மீசாலை மேற்கைச் சேர்ந்த ஆறுமுகம் விநாயகமூர்த்தி (வயது52) என்பவரே காயமடைந்தார்.

இச்சம்பவங்கள் இரண்டும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

சம்பவத்தில் காயமடைந்த சகலரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

(202-207)

## கட்டுடைப் பிரதேச மேட்டு நிலங்கள் ஊடாக மண் ஏற்றும் உழவு இயந்திரங்கள் செல்கின்றன

### அதனால் பயிர்ச்செய்கை பாதிக்கப்படுவதாக முறைப்பாடு

வலி.தென் மேற்கு,மார்ச்13

கட்டுடைப் பகுதியில் மேட்டு நிலங்களூடாக மண் ஏற்றிச் செல்லும் உழவு இயந்திரங்கள் சென்று வருவதால் பயிர்ச்செய்கை பாதிக்கப்படுவதாக விவசாயிகள் மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்திடம் முறையிட்டுள்ளனர்.

கட்டுடைப் பிரதேச மேட்டு நிலங்களில் விவசாயிகள் எள், பயறு, சணல் போன்ற பல்வேறு சிறுதானிய வகைகளைப் பயிரிட்டுள்ளனர். இப்பகுதியில் மண் ஏற்றிச் செல்லும் உழவு இயந்திரங்கள் விதை நிலங்களுக்கூடாகச் செல்கின்றன.

அத்துடன் மேட்டு நிலங்களின் உரிமையாளர்களிடம் முன் அனுமதி எதுவும் பெறாமல் அத்துமீறி இந்த மண் அகழ்வு நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று விவசாயிகள் சம்மேளனத்தினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(202-135)

## சிறந்த தொழில் முயற்சியாளர் விருதுக்கு யாழ். மாவட்டத்திலிருந்து 32 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச்13

சிறந்த தொழில் முயற்சியாளர் - 2007 விருதுக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து 32 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

12 தொழில் முயற்சிகளில் இருந்து இத்தெரிவு இடம்பெற்றுள்ளது.

தொழில் முயற்சிகளும் தெரிவுசெய்யுப்பட்டவர்களின் விவரமும் வருமாறு:

**இலத்திரனியல் மற்றும் மின்சார உபகரணங்கள்** - சோமசேகரன் ககனானந்தா ('மைக்ரோ பி சி சிஸ்ரம்' - யாழ்ப்பாணம்), திருவாதவூரர் திருக்குமரன் (தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.)

**இயந்திரங்கள் மற்றும் இயந்திரப் பகுதிகள்** - கனகசபை பூரணச்சந்திரன் (ஸ்ரார் இன்டஸ்ரியல் சேர்விஸஸ் (பிரைவேட் லிமிடெட் - நல்லூர்.), சின்னத்தம்பி பிரபாகரன் (சங்கானை.)

**கனிப்பொருள்கள் மற்றும் இரசாயன அடிப்படையிலான உற்பத்திகள்** - சுப்பிரமணிய ஆசாரி பாஸ்கரன் ஆசாரி (யாழ்ப்பாணம்.), மாரிமுத்து பரமநாதன் (கல்வியங்காடு), பத்மநாதன் - சுரேன்('டைமன் இன்டஸ்ரி' - மல்லாகம்)

**அச்சிடும் கடதாசி மற்றும் கடதாசிக் கூழ் அடிப்படையிலான உற்பத்திகள்** - எஸ்.ராஜ்குமார் ('கரிகணன் பிறின்டஸ்'- யாழ்ப்பாணம்), சின்னத்துரை யசோதரன் (எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ் - நல்லூர்.)

**இலகு பொறியியல் மற்றும் பொறியியல் கைத்தொழில்கள்** - தோமஸ் கிறிஸ்ரின் செல்வராஜன் ''நியூட்டா இன்டஸ்ரி'' - யாழ்ப்பாணம்), கந்தப்பு விமலராஜா (நெல்லியடி, கரவெட்டி), கதிரவேலு தவயோகநாதன்(K.T.R. பூம்புகார் ரேடேர்ஸ் -பருத்தித்துறை)

**உணவு மற்றும் பானங்கள்** - சுப்பிரமணியம் நிமலேந்திரன் ('நாயகி புரடக்ஸ்' வட்டுக்கோட்டை), துரைரட்ணம் கெங்கேஸ்வரன் ('சுவிற்றி இன்டஸ்ரி' யாழ்ப்பாணம்), பற்குணராசா பாலமுருகன் ('அல்பா மிக்சர்' மானிப்பாய்)

**கட்டடம் மற்றும் கட்டடப் பொருள்கள் அடிப்படையிலான உற்பத்திகள்**- அம்பிகைபாலன் மோகனராஜன் ('சாம் கட்டடப் பொருள் உற்பத்தி விற்பனைகள் நிலையம்' - ஆனைக்கோட்டை), சொலமன் அல்பிரட் ஜோசப் (பருத்தித் துறை), ஆறுமுகநாதன் ஜனார்த்தனன் (தெல்லிப்பழை).

**மரம் மற்றும் மர அடிப்படையிலான உற்பத்திகள்** - சின்னத்தம்பி அமரசிங்கம் (வட்டுக்கோட்டை), இளையதம்பி இராசநாயகம் ('துர்க்கா மரத்தொழிற்சாலை'- சண்டிலிப்பாய்), மரியதாசன் சிம்சன் (ஊர்காவற்றுறை)

**தைத்த ஆடைகள் மற்றும் ஒத்த உற்பத்தி** - வசந்தன் கணேஸ்வரி ('திசோ தையலகம்' - சண்டிலிப்பாய்), இராசையா நேசராசா ('ஜதுஸ் தையல் நிலையம்' - பருத்தித்துறை).

**பாதணி, தோல் உற்பத்தி**- சிவதாசா சந்திரமேனன் (அல்வாய்), ஞானப்பிரகாசம் அருள்ஞானசெல்வம் (கரவெட்டி). தளையசிங்கம் யோகதாஸ் ('சியாம்ஸ் சூப் பலஸ் - அல்வாய், வதிரி)

**சுயதொழில்துறை** - நடராஜா ஸ்ரீ ஆனந்தராஜன் (யாழ்ப்பாணம்), விஜயதர்சினி ஜகோப் மனோகரன் (பண்டத் தரிப்பு) மரியதாஸ் லொயிட் லூகிதராஜ் ('சஜந் தையலகம்' - பருத்தித்துறை)

**வேறு உற்பத்திகள் மற்றும் சேவைகள்** - அகஸ்ரீன் வேதானந்தம் ('ஆனந்தி அன் கோ'-மல்லாகம்), கனகசபை இராசேந்திரம் (ஆனைக்கோட்டை), ரஞ்சினிதேவி இராஜ்குமார்(கொக்குவில்).

## வடமராட்சி முன்பள்ளிகளுக்கு 'மலரும் மொட்டு' நூல் இலவசமாக விநியோகம்

வடமராட்சி, மார்ச்13

சிறுவர்களுக்கான கதைகள், பாட்டுக்கள், சித்திரங்கள் கொண்ட 'மலரும் மொட்டு' எனும் புத்தகம் வடமராட்சிப் பிரதேச முன்பள்ளிகளுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளன.

கரணவாய், கொற்றாவத்தை அமரர் இராமகிருஷ்ணபிள்ளை ஞாபகார்த்தமாக முன்பள்ளி மாணவர்களுக்கு மிக உபயோகமான முறையில் ஆக்கப்பட்டுள்ள இப்புத்தகத்தை அன்னாரின் மகனான கி. பூபாலன் முன்பள்ளிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

(202-236)

## வலிகாமம் வடக்கில் மீளக்குடியேற்றம்: காணி ஆவணங்களைச் சமர்ப்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்13

வலி.வடக்குப் பிரதேசத்தில் மீளக்குடியமர்த்தும் திட்டத்தின் கீழ் மீளக்குடியேற விருப்பம் தெரிவித்து இதுவரை அப்பகுதி காணி உறுதி சமர்ப்பிக்காத தென்மராட்சி பிரதேசத்தில் தங்கியுள்ள வலி. வடக்குப் பிரதேச மக்கள் அவற்றைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

காணி உள்ளதை உறுதிப்படுத்தும் உறுதி அல்லது ஏற்கனவே பெறப்பட்ட வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களையே சமர்ப்பிக்கக் கோரப்பட்டுள்ளது.

மீளக்குடியேற விரும்புவோர் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் குறிப்பிட்ட ஆவணங்களை உடன் கையளிக்குமாறு தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித் துள்ளார்.

(203-207)

## கோப்பாய் கோட்ட மெய்வன்மைப் போட்டிகள் பிற்போடப்பட்டன

யாழ்ப்பாணம்,மார்ச்13

கோப்பாய் கோட்ட பாடசாலைகளின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் மழை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளன என கோட்டக்கல்வி அதிகாரி என். சித்திரவடிவேல் தெரிவித்தார்.

இப்போட்டிகள் இன்று தொடக்கம் 3 தினங்களுக்கு நடைபெற ஏற்பாடாகி இருந்தன என்றும் -

புதிய திகதிகள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.


(202)

# மரவள்ளிக்கிழங்கின் பெறுமானத்தை அதிகரித்து விலை வீழ்ச்சியைத் தடுக்கலாம்

## சிறந்த சிற்றுண்டிகளை மட்டுமன்றி "பிஸ்கட்" வகைகளையும் தயாரிக்கலாம்

### விவசாய அலுவலருடன் ஒரு சந்திப்பு

யாழ். குடாநாட்டில் உள்ள மரவள்ளிக் கிழங்கு செய்கையாளர்கள் அதன் பெறுமான அதிகரிப்பை மேம்படுத்துவதன் மூலம்



இத்தொழிலில் காணப்படும் விலை வீழ்ச்சியைத் தடுத்து உரிய பயனைப் பெறலாம்.

விவசாயிகள் பயிரிடுதலுடன் நின்றுவிடாது அதனோடு தொடர்புடைய உப தொழில்களைக் கண்டறிந்து உயர்ந்த வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியும். மரவள்ளியிலிருந்து சுவையான பண்டங்களைத் தயாரிக்கலாம்.

இவ்வாறு விளக்கமளித்தார் விவசாயத் திணைக்களத்தின் பெண்கள் விவசாய விரி வாக்க அலுவலர் செல்வி கு.கமலாம்பிகை.

மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் காரியாலயத்தில் உதயன் பத்திரிகை சார்பில் சந்தித்து உரையாடியபோது அவர் கூறிய தகவல்கள் பயனுள்ளவையாய் இருந்தன. அவர் கூறியதாவது:




**பதப்படுத்தி வைத்தால்...**

மரவள்ளிக்கிழங்கு தற்பொழுது மிகக் குறைந்த விலையில் சந்தைப்படுத்தப் படுகிறது. கேள்வி குறைவாக இருப்பதே பிரதான காரணம். இக்காலத்தில் பெறப்படும் கிழங்கு வகைகளை பொருத்தமான முறையில் பதப்படுத்தி சேமித்து வைப்பதால் சந்தை விலையை நியாயமான மட்டத்தில் பேண முடியும். சீவலாக்கி வெயிலில் உலர்த்தி சேமித்தல், மர வள்ளி சீவல் பொரியல்களைத் தயாரித்து சந்தைப்படுத்துதல், மரவள்ளி மா தயாரித்தல் போன்ற செயன் முறையால் பெறுமானத்தையும் வருமானத்தையும் மேம்படுத்தலாம்.

இதை உற்பத்தியாளர்கள் மட்டுமன்றி ஏனையவர்களும் குடும்ப வீட்டுத் தொழிலாகக் கொள்வது சிறப்பானதாகும்.

**மரவள்ளி மாவில் பிட்டு**

மரவள்ளி மாவிலிருந்து பிட்டு, ரொட்டி, இடியப்பம், றோல்ஸ், வடை, பகோடா, சப்பாத்தி, வாய்ப்பன், விசுக் கோத்து, கேக் என்பவற்றை ஆக்கலாம். கோதுமை மா போன்ற ஏனைய மா வகைகளுடன் கலப்பதன் மூலம் தரத்தை உயர்ந்த மட்டத்தில் பேணக் கூடியதாக இருக்கும்.

யாழ்.மாவட்டத்தில் காலபோகத்தில் 370 ஹெக்டேயரிலும், சிறுபோகத்தில் 248 ஹெக்டேயர் நிலப் பரப்பில் (1545) ஏக்கர் செய்கை பண்ணப்படுகிறது. ஹெக்டேயருக்கு (2.5 ஏக்கர்) 20 மெற்றிக் தொன் சராசரி விளைச்சலாக பெறப்படுகிறது.

**பாதுகாப்பு முறை**

சீவலாக்கி சேமித்து வைப்பதே சிறந்த முறை. முற்றிய, புதியதாக அறுவடை செய்யப்பட்டவற்றை தெரிவு செய்ய வேண்டும். தோல் அகற்றி நன்றாக சுத்தப் படுத்தியவற்றை மெலிதான சிறிய சீவல்களாகச் சீவி வெயிலில் உலர்த்தலாம்.

சூரிய உலர்த்தியை பாவிப்பதாயின் 3.5x3.5 அடி நீள அகலமானதாக இருப்பது பொருத்தமான தாகும்.

வெயிலில் உலர வைப்பதாயின் சுத்தமான பாய்களில் பரவி காயவிட வேண்டும். பறவைகள், விலங்குகளால் அசுத்தப்படாதிருக்க காப்பு வலைகளைப் பாவிப்பது நல்லது. 3-4 நாள்களுக்குள் இரண்டு முறை புரட்டி விடுதல் போதுமானது.

காற்றுப்புகாத கொள்கலன்களில் நீண்டகாலம் களஞ்சியப்படுத்தலாம். தேவையான பொழுது அரைத்து மாவாக்கிப் பயன்படுத்தவேண்டும். மரவள்ளி மாவை மூன்று மாதங்களுக்கு மேல் சேமிக்க முடியாது.

10 கிலோ கிழங்கிலிருந்து 3 கிலோ மாவைப் பெறலாம். கேள்வி குறைவான காலத்தில் குறைந்த செலவில் மா தயாரிப்பது இலாபகரமானதாகும்.

மரவள்ளி மாவிலிருந்து முற்கூறிய உணவுப்பண்டங்களைத் தயாரிப்பதுடன் மரவள்ளிக்கூழ் தயாரிக்கலாம். இதை விட மரவள்ளி சீவலைப் பயன்படுத்தி பொரியல் பொதிகளைத் தயாரிப்பதும் அதிக வருமானத்தைத் தரக்கூடியதாகும்.

இதைக் குடும்பப் பெண்களுக்கு வரு மானம் ஈட்டும் சிறந்த குடிசைத் தொழிலாக வளர்த்தெடுக்க அனைவரது ஒத்துழைப்பும் தேவை என அவர் மேலும் தெரிவித்தார்.

**'பிஸ்கட்' தயாரிக்கும் முறை**

தேவையான பொருட்கள்: மரவள்ளி மா-125 கிராம், கோதுமை மா-125 கிராம், சீனி-100 கிராம், பேக்கிங் பவுடர்-1 தேக்கரண்டி, முட்டை மஞ்சள் கரு-2, மாஜரின்-50 கிராம், பால்- 6 மேசைக்கரண்டி

மரவள்ளி மா, கோதுமை மா, பேக்கிங் பவுடரை மூன்று முறைக்கு மேல் அரிக்கவும். பின்பு மாஜரின், சீனி இரண்டையும் சேர்த்து நன்றாக அடித்து கலக்கவும். நன்றாக அடித்த மஞ்சள் கருவை சிறிது சிறிதாக சேர்த்து பிசைந்த பின் மாவை தூவிய பலகை ஒன்றில் இட்டு தட்டி விரும்பிய வடிவில் வெட்டி எடுத்த பின்னர் 'கேக்' தட்டில் இட்டு 'அவனில்' 'பேக்' பண்ண வேண்டும்.

இது குடும்பப் பெண்களுக்கு ஒரு பொழுது போக்காகவும், குடிசைத் தொழிலாகவும், அமைவதுடன் மேலதிக வருமானத்தை ஈட்டுவதற்கான சிறந்த வழி என அவர் சுட்டிக் காட்டினார்.

சந்தித்தவர்: **பேரின்பநாயகம்**

# வாசகர் திருமுகம்

## யாழ்.மாவட்டத்திற்கு நீச்சல் தடாகம் அவசியமான தேவை

இன்று யாழ்.மாவட்டத்தில் நீச்சல் பயிற்சி பெற அல்லது உடற்பயிற்சிக்காக நீந்த ஓர் இடமில்லை. முன்பு சிலர் கீரிமலை, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை போன்ற இடங்களுக்கு நீச்சலுக்குச் செல்வார்கள். ஆனால் இன்று கடற்கரைக்கு மீனவர்களை விட ஏனையவர்கள் செல்லமுடியாது. அதைவிட சுனாமிப் பேரலைக்குப் பின் எவரும் துணிந்து நீச்சலுக்காகக் கடலுக்குப் போவதில்லை. பெற்றோர்களும் பிள்ளைகளை அங்கு செல்ல அனுமதிக்கமாட்டார்கள். தகுந்த நீச்சல் தடாகம் இன்மையால் மாரி காலங்களில் சிறுவர்கள் வயல் கிணறுகள், குளங்கள் ஆலயக் கேணிகளில் நீந்தி விளையாடுவார்கள். இவை நீச்சலுக்குப் பாதுகாப்பான நீர்நிலைகள் அல்ல; ஆபத்தானவை.

எனவே யாழ்.மாவட்டத்திற்கு ஒரு நீச்சல் தடாகம் அவசியமாகிறது. கொழும்பிலுள்ள பிரபல கல்லூரிகளில் நீச்சல் தடாகங்கள் உண்டு. ஆனால் அதேபோன்று இங்கு கல்லூரிகளில் நீச்சல் தடாகம் அமைப்பது இயலாத காரியம் எனினும் திருநெல்வேலி, நிலாவரை, பொக்கணை போன்ற இடங்களில் நீச்சல் தடாகம் அமைக்கமுடியும். ஆரம்பத்திற்கு நிலாவரை ஓர் இடமாக அமையலாம். அங்கு போதிய நீர், நிலம் இருப்பதனால் வெளியேறும் நீரை விவசாயத்திற்கு பயன்படுத்தலாம்.

இதுபற்றி அரசாங்க அதிபர், கல்லூரி அதிபர்கள், முதலீட்டாளர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நீச்சல் ஆர்வலர்கள் கவனம் செலுத்தவேண்டும். நாட்டு நிலைமைகளைக் காரணம் காட்டி இவ்வேலைத்திட்டத்தை கவனிக்காமல் இருப்பது சரியாகாது. முதல் கட்ட தேவையான தடாகத்தை அமைத்தால் பின்பு அதனால் கிடைக்கும் வருமானத்தில் மிகுதி வேலைகளைப் பூர்த்திசெய்து திறமான நீச்சல் தடாகமாக மாற்றி விடலாம். காலப்போக்கில் நீச்சல் வீரர்களையும் உருவாக்கலாம். இதில் தாமதமின்றி கூடிய கவனம் எடுக்கப்படும் என எதிர்பார்ப்போம்.

*இன்னகம்.* **வே.மகேந்திரன்.**

## பாதைத் திருத்தத்திற்கு பெரிய "றோலர்" பாவிக்கவேண்டும்

இராச வீதி பழைய நிலையைவிட சமீப காலத்தில் மிகவும் நல்லமுறையில் செப்பனிடப்பட்டு சிரமம் இன்றிச் சென்றுவரக்கூடியதாக அமைக்கப்பட்டிருந்தது. தற்பொழுது மீண்டும் அவ்வீதி பழைய நிலைக்குத் தள்ளப்பட்டு விடுமோ என்ற நிலை ஏற்பட்டு வருகின்றது.

இப்பாதை கூடிய கெதியில் இன்னும் குன்றும் குழியுமாக மாறிவிடும் போல் தெரிகிறது. அதிகாரிகள் இப்பாதையைப் பார்வையிட்டு அதன் உண்மையான நிலை அறிந்துகொண்டு திருத்த வேலைகளைச் செய்யவேண்டும்.

கல்போட்டு தார் ஊற்றும்போது பெரிய 'றோலரை'க் கண்டிப்பாகப் பாவித்துக்கொண்டால் திருத்தும் வீதிகள் கடைசி 5, 6 வருடங்களாவது நல்ல உறுதியோடு இருக்கும்.

*கோப்பாய்.* நலன்விரும்பி.

# 'மன்னியுங்கள், மன்னிப்பு பெறுவீர்கள்' சிலுவை கற்றுத் தரும் பாடம் இது!

"மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார்" *(மதீ 6:14)*

மன்னிப்பு மன்னிப்பை பெற்றுத் தரும். மன்னிப்பு என்பது பூரணமான ஒரு விடயம். அது இரண்டு பக்கங்களைக் கொண்ட நாணயம் போன்றது. ஒரு பக்கமுள்ள நாணயத்தை யாரும் கண்டதில்லை. அதேபோல ஒரு பக்கம் மாத்திரம் கொண்ட மன்னிப்பு பூரணப்பட்டதல்ல.

பூரண மன்னிப்பு என்பது,

* ஒருவர் எனக்கு விரோதமாக செய்த குற்றங்களை மறந்துஒப்புரவாகுதல்.
* அவருக்கு எந்தநேரத்திலும் உதவிக் கரம் நீட்டுவது.




"எவராவது உங்களை ஒரு கல் தொலைவரக் கட்டாயப்படுத்தினால் அவரோடு இரு கல் தொலை செல்லுங்கள் (மத் 5:41) என்கிறார் கிறிஸ்து. இங்கு எமக்கு எதிராகக் குற்றம் செய்தவர்களை மன்னித்து மறந்துவிடுவது ஒரு கல் தொலை. அவருக்கு உதவிக்கு விரைவது இருகல் தொலை செல்வதாகும்.

"உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள், உங்களை துன் புறுத்துவோருக்காக செபியுங்கள்" (மத் 5:44) இது ஆன்மீக நன்மை செய்வதாகும். எனக்குத் தீங்கு நினைப்பது, தீங்கிழைப்பது ஒருவரின் குணாதிசயம் என்றால் மன்னிப்பது எனது பண்பாக விளங்கட்டும். அவன் குற்றம் செய்வதில் இருந்து மனம் மாறவில்லை என்றால் நான் மன்னிப்பதிலிருந்து மாறக்கூடாது. இதை என்னால் செய்யமுடியும் எப்போது? இறைவனில் பூரணமாகத் தங்கியிருந்தால் மட்டுமே நான் கிறிஸ்துவிற்குள்ளும் எனக்குள் பரிசுத்த ஆவியும் தங்கியிருக்கும்போது மன்னிப்பது இலகுவானது.

"என்னையே பலியாக்கி உன் அக்கிரமங்களை மீறுதல்களையெல்லாம்" மன்னித்தேன். உன்மேல் கொண்ட பேரன்பின் நிமித்தம் இதைச் செய்தேன். இதேபோல் நீயும் உன் சகோதரர்மேல் அன்பு கொண்டு அவர்கள் குற்றங்களை மன்னிப்பாய். இது தான் சிலுவை கற்றுத் தரும் பாடம்.

மன்னிப்பு! மன்னிப்பு! மன்னிப்பு!

**Sr.டிலோசியா (தி.கு).**

# நீ கடவுளைச் சேர்ந்தவன் என்ற உணர்வை வளர்த்துக்கொள்

*எவ்வாறு சர்க்கரை, எதனுடன் சேர்ந்தாலும், நீர், டீ, காபி, எதுவானாலும் தனது இனிப்பை அளிக்கிறதோ, அது போல பிரேமை என்பதும் இனியதே- அதுவும், உன் வார்த்தைகள், செயல்கள், எண்ணங்கள் எல்லாவற்றிலும் இனிமை சேர்க்கும்.*

*அன்பு தான் அத்திவாரம்*
*சத்யமே சுவர்கள்*
*அமைதியே கூரை.*
*அன்பினை ஆதாரமாகக் கொண்ட சத்யமே, சிறந்த தர்மம்.*

*இயல்பாகவே அனைவரிடமும் அன்பு என்பது நிறைந்திருக்கிறது. அதனை உன் மனைவி, மக்கள், சொந்தம் எனத் திருப்புவதற்குப் பதில், இறைவனை நோக்கித் திருப்பி விடு. இவ்வாறு செய்யும் போது உனக்கு எது வேண்டுமானாலும் கிடைக்கும்! இறைவன் அளித்திருப்பது இதயம்! அதனை அவருக்குச் சமர்ப்பித்து விடு. உனக்கு எந்தப் பயமும் வேண்டாம். இந்த உடலையும் கூட இறைவனுக்கே சமர்ப்பணம் செய்து விடு. ஏனெனில் உடலும் கூட இறைவன் அளித்துள்ள பரிசே! ஒவ்வொரு செயலும் பிரேமையை அடிப்படையாகக் கொண்டு விளங்கவேண்டும். சேவை செய்வதும் பிரேமையுடன் செய்யவேண்டும். நீ கடவுளைச் சேர்ந்தவன் என்ற உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும்.*



**சாயி சிந்தனை**

# சிங்களக் குடியேற்றங்களின் தாற்பரியத்தை தமிழர்களுக்கு விளக்குவது அவசியமானது

## வாழ்த்துச் செய்தியில் பிரபாகரன் கருத்து

கிளிநொச்சி,மார்ச்13

''குடியேற்றங்களின் உண்மையான தாற்பரியத்தையும், அவை குறித்து அர்த்த



பரிணாமங்களையும் எமது மக்களுக்கு எடுத்துக் கூறித் தெளிவூட்ட வேண்டிய தேவையும், கடப்பாடும் இன்று ஏற்பட்டிருக்கின்றது.''

- இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

போராளி சி.விபுலேந்திரன் (அன்புச் செல்வன்) எழுதிய 'தமிழீழ எல்லைகளை நோக்கி நகர்வோம்'' என்ற நூலுக்குத் தமிழீழத் தேசியத் தலைவர் அளித்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

மனிதன் என்பவன் உலக ஜீவராசிகளில் முதன்மையானவன். அவன் இயற்கை என்ற மாபெரும் சக்தி படைத்த அற்புதமான கலைவடிவம், உயர்ந்த உயிர்வடிவம்.

இயற்கை மனிதனை இவ்வாறு படைத்ததோடு மட்டும் நின்றுவிடவில்லை; அவன் தன்னைத்தானே படைத்துக்கொள்ளவும், பாதுகாத்துக்கொள்ளவும் தனது இனத்தை விருத்தி செய்து தனது இனத்தின் இருப்பை இறுதி செய்துகொள்ளவும் நிர்ப்பந்திக்கின்றது.

இந்த இயற்கையின் தவிர்க்க முடியாத நியதிக்குள் நிர்ப்பந்தத்திற்குள் சிக்குண்டு மனித வாழ்வு சுழல்கின்றது. இந்தச் சுழற்சியின் படிமங்கள் வாழும் மக்களின் அகத்திலும் புறத்திலுமாக பதிவாக்கம் செய்யப்படுகின்றன, அந்த மக்கள் கூட்டத்தின் - சமூகத்தின் - இனத்தின் - வரலாறாக விரிகின்றன. இத்தகைய வரலாற்றின் ஒட்டுமொத்தப் பதிவுகள் அந்த இனத்தின் நிரந்தர நிம்மதியான இருப்புக்குச் சாட்சியாக, அவர்களின் கௌரவமான வாழ்வை அலங்கரித்து பெருமை சேர்க்கின்றன.

இலங்கைத் தீவில் ஏலவே வாழ்ந்த இனமொன்றின் மீது ஆக்கிரமிக்க நினைத்த இனம் ஒன்றின் பரிநிர்மாணத் துறவிகள் பின்புலமற்ற புனிதமான புனைவான் வரலாறு ஒன்றை வடிவமைத்து, அதற்காகவே நிகழ்காலத்தை திரித்து, மாலையாக்கி அவர்களே உருவாக்கிய மாலையை அரச குலத்தாருக்கு சூட்டி மகிழ்ந்தார்கள். அதன் தொடர்ச்சியாக வாழ்ந்த இனத்தின் இருப்பியல் அபிலாசைகளுக்கு வேட்டு வைக்கும் படியான வரலாற்று நூல்களை ஆக்கித் தமது வளரும் இளம் சந்ததியினருக்கு திணித்து வந்தார்கள். இத்தகைய திரிக்கப்பட்ட வரலாற்றுத் திணிப்பின் விளைவாக சிங்கள இனம் இன்று பேரினவாதப் படுகுழிக்குள் வீழ்ந்து கிடக்கின்றது.

இருண்டகால இதிகாசங்களின் கருத்துப்போர்வையால் உசுப்பேறி, எமது தேசிய இனக்கட்டமைப்பை சிதைத்து, எம்மை இனரீதியாக அழித்துவிடசிகள அரசு நீண்டகாலமாக கங்கணம் கட்டி நிற்கின்றது.

தமிழரின் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை எனும் மூலாதாரக் கோட்பாடுகளுக்கு வேட்டு வைத்து வரலாறு ரீதியாக எமக்கு உரித்தான எமது தாயக மண்ணில் எம்மை அழித்துவிடத்திட்டம் போட்டது. அபிவிருத்தித்திட்டங்கள் என்ற போர்வையில் தமிழீழத் தமிழர் தாய் மண்ணில் சிங்களக் குடியேற்றங்களை அமைத்து, நில அபகரிப்பை ஆரவாரமின்றி அமைதியாகவும், காத்திரமாகவும் முன்னெடுத்தது.

தமிழர்கள் விழித்துக்கொண்டபோது சிங்களப்படைகளையும் - சிங்களக்காடையர்களையும் நேரடியாக அனுப்பி எமது மக்களை அடியோடு அடித்து விரட்டி எம்மக்களது பிணக்குவியலின் மேல் குடியிருப்புக்களை நிறுவிக்கொண்டது. தமிழர்கள் இறுதியாகப் போராட ஆரம்பித்ததும் இராணுவ நடவடிக்கைகளையும், குண்டு வீச்சுக்களையும், ஷெல் வீச்சுக்களையும் பெரியளவில் தொடர்ச்சியாக மேற்கொண்டு தமிழர்களின் குடிமனைகளையும், குடியிருப்புக்களையும் பெரியளவில் ஆக்கிரமித்தது.

பலகோடி செலவில் பல்லாயிரம் இராணுவத்தைக் குடியமர்த்தி பிரமாண்டமான இராணுவத்தளங்களை அமைத்து, எமது தாயகத்தை நீண்ட இராணுவ வேலிகளால் முற்றுகையிட்டது. இராணுவப் பாதுகாப்பிற்கு மத்தியில் சிங்களக் குடியிருப்புக்களை நிறுவி எமது தாய்நிலத்தை பல கூறுகளாகத் துண்டாடி அதன் புவியியல் ஒருமைப்பாட்டை சிதைக்க முயற்சித்தது. இப்படி அடாவடியாக முளைத்தெழுந்து, இன்று பூதாகரமாக வடிவம் எடுத்துள்ள இந்தச் சிங்களக் குடியேற்றங்கள் இராணுவக் குறிக்கோளும், அரசியல் ரீதியான அந்தரங்க நோக்கங்களும் கொண்டவை.

நாம் பிறந்து வாழ்ந்த எமது தாயக மண்ணிலேயே எமது இருப்புக்கு ஆப்பு வைத்து, எமது நிலங்களை பெரியளவில் வேகமாக விழுங்கிவருகின்றன. இந்தக் குடியேற்றங்களின் உண்மையான தாற்பரியத்தை அர்த்த பரிமாணங்களில் எமது மக்களுக்கு எடுத்துக்கூறித் தெளிவூட்ட வேண்டிய தேவையும் கடப்பாடும் இன்று இருக்கின்றது.

எமது போராளியான சி.விபுலேந்திரன் (ரவி) இந்தத் தேவைகளையும், கடப்பாடுகளையும் கவனத்தில் எடுத்து அதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி ''தமிழீழ எல்லைகளை நோக்கி நகர்வோம்'' என்ற நூலை எழுதி வெளியிடுவது எனக்குப் பெரும் மகிழ்வைத் தருகின்றது.

சிங்கள அரசு தாயக மண்ணில் காலத்திற்குக் காலம் நிகழ்த்திய மண் பறிப்பையும் நில ஆக்கிரமிப்பையும் அதன் ஆழ அகலங்களில் கால வரிசைப் படி தரிசித்து கதையாகக் கூறும் ஓர் உயர்ந்த வரலாற்று நூலாக இது அமைந்திருக்கின்றது.

நிலங்களைப் பறிகொடுத்து தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் எண்ணற்ற பிரச்சினைகளையும், பெரும் நெருக்கடிகளையும், பெரும் வாழ்வியல் சுமைகளையும் பல்வேறு கோணங்களில் படம் பிடித்துக் காட்டும் காலப்பெட்டகமாக இது எழுதப்பட்டிருக்கின்றது. சிங்கள அரசின் நில அபகரிப்பு நாடகத்தின் இன்றைய கொடூரமான வடிவத்தையும், அது தமிழின ஆன்மாவில் விழுத்தியுள்ள நிரந்தரவடுவையும் அங்குலமங்குலமாக, ஆழமாக, அலசிப் பார்த்து விலாவாரியாக இந்நூல் விளக்குகின்றது. மொத்தத்தில் இது கனமான ஒரு காலப்பதிவேடாக எல்லோருக்கும் விளங்கும் எளிய மொழிநடையில் நேர்த்தியாக அமைக்கப்பட்டிருக்கின்றது.

தமிழீழ வரலாற்றில் இந்நூல் என்றும் நிலைதிருக்க வாழ்த்துவதோடு, இந்நூலின் ஆக்கத்திற்கு அயராது உழைத்த இந்தப் போராளிப் படைப்பாளியை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

அத்தோடு, இவரது வரலாற்றுப் பணி தொடர்ந்தும் சிறக்க எனது நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# வாக்கு மோசடியில் பிள்ளையான் குழு; குற்றம் சாட்டுகின்றது ஈ.பி.டி.பி. கட்சி

கொழும்பு, மார்ச் 13

மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தலுக்காக கறுவேப்பங்கேணி வாக்களிப்பு நிலையத்தில் வாக்கு மோசடியில் ஈடுபட முனைந்தார்கள் என்று கூறப்படும் பிள்ளையான் குழுவைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைகளில் பெருமளவில் வாக்குச் சீட்டுக்களை எடுத்துச்சென்ற இவர்கள் பலவந்தமாக வாக்குகளை செலுத்த முற்பட்ட வேளை அங்கு தேர்தல் கடமையில் இருந்த சுயேச்சைக் குழுவில் அங்கம் வகிக்கும் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த ஒருவர் வழங்கிய தகவலை அடுத்து விசேட அதிரடிப் படையினர் 6 பேரையும் கைது செய்தனர் என்று ஈ.பி.டி.பியின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (ரி.எம்.வி.பி.) கட்சியினரால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் மற்றும் வாக்கு மோசடிகள் குறித்து ஈ.பி.டி.பியின் இணையத்தளம் வெளியிட்டிருக்கும் தகவல் வருமாறு:-

மட்டக்களப்பு மாநகரசபை - மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட சிசிலியா கொன்வென்ட் பாடசாலையில் ரி.எம்.வி.பியின் உறுப்பினரான கலிங்கன் என்பவர் தலைமையில் சென்ற சுமார் 20 பேர் கொண்ட குழுவினர் இவ்வாறான மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாநகரசபை - மட்டக்களப்பு ஊறணி மகாவித்தியாலய வாக்களிப்பு நிலையத்திற்குள் புகுந்த ரி.எம்.வி.பி. கட்சியினர் கட்டுக்கட்டாக கள்ள வாக்குச் சீட்டுக்களை அளித்து விட்டுச் சென்றுள்ளனர். மட்டக்களப்பு மாநகர சபை - இருதயபுரம், கறுவேப்பங்கேணி வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்லும் பொதுமக்களிடம் வாக்காளர்கள் அட்டையை ரி.எம்.வி.பி. கட்சியினர் பறித்தெடுத்திருக்கின்றனர்.

கோரளைப்பற்று பிரதேசசபை - வாழைச்சேனை கறுவாக்கேணி மகாவித்தியாலயத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் மிக மோசமான வாக்கு மோசடிகள் இடம் பெற்றுள்ளன. இவ்வாக்களிப்பு நிலையத்திற்கு முன்னாலேயே ரி.எம்.வி.பி. கட்சியின் அலுவலகமும் அமைந்துள்ளது. அங்கிருப்பவர்கள், அஜித் என்பவரின் தலைமையிலேயே இந்த வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கோறளைப்பற்று பிரதேசசபை - வாழைச்சேனை பேய்த்தாளை விபுலானந்த வித்தியாலயத்திற்குள் நுழைந்த ரி.எம்.வி.பி. கட்சியினர் அங்கிருப்பவர்களை அச்சுறுத்திக் கள்ளவாக்குகளைப் போட்டு வாக்குப் பெட்டிகளை நிரப்பியுள்ளனர்.

பயத்தின் காரணமாக வாக்களிக்கச் சென்றோர் வாக்களிக்காமல் திரும்பியுள்ளனர். மட்டக்களப்பு மாநகரசபை - மட்டக்களப்பு பூதூர் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் வாக்களிக்கச் சென்றவர்களுக்கு மதுபானமும் உணவுப் பார்சலும் வழங்கி வெற்றிலைச் சின்னத்திற்கும் 10ஆம் இலக்கத்திற்கும் வாக்களிக்குமாறு ரி.எம்.வி.பி. கட்சியினர் பகிரங்கமாகத் தெரியப்படுத்திய வண்ணமிருந்தனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# பெண்களின் சாதனைகளை வெளிப்படுத்த விழிப்புணர்வுச் செயற்பாடுகள் அவசியம்

## சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச்13

இலைமறை காய்களாக இருக்கும் பெண்களின் திறமைகளை வெளிக் கொணர மகளிர் அமைப்புகள் முன்வரவேண்டும். ஒவ்வொரு பெண்ணும் சாதனை படைக்கும் தகைமையுள்ளவள்தான் என்பதை உணர்த்தும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் பல முன்னெடுக்கப்படவேண்டும்.

சாவகச்சேரி நகரசபைக் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மகளிர் தின நிகழ்வில் சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

சுயசிந்தனையுடன் முயற்சி செய்யும் ஒவ்வொரு பெண்ணும் சாதனை படைக்கும் தகைமை கொள்கிறாள். உலகில் முயற்சி செய்து திறமைகளை வெளிக்காட்டிய பெண்கள் பெண்ணியத்திற்கே உதாரணமாகத் திகழ்கின்றனர்.

அரசியல், அறிவியல், ஆராய்ச்சியியல், வானியல் உட்பட பல துறைகளில் புரட்சிகளை ஏற்படுத்தி உலகத்தின் கவனத்தை தம்பக்கம் ஈர்த்த பெண்களை இன்றும் எவரும் மறக்கவில்லை. இனம், மொழி, மதம், கலாசாரம் போன்ற வேறுபட்ட நிலைப்பாடுகள் காணப்பட்டாலும் பெண்ணாகப் பிறந்த அனைவரையும் கௌரவிக்கும் விதத்தில் இன்றைய தினத்தை சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாடுகின்றனர். இத்தினத்தை விழாவாக அனுஷ்டிக்காமல் ஒவ்வொரு பெண்ணும் சாதனை படைக்கத் தம்மைத் தயார் செய்யும் நாளாக எண்ணிக்கொள்ள வேண்டும்.

பெண் அடிமைத்தனம் பண்டைய காலம் தொடக்கம் உள்ளதாகப் பேசப்படுகிறது. பண்டைய காலத்தில் ஔவையார், காரைக்கால் அம்மையார் போன்ற கவிஞர்களும் இன்னும் புகழ்நிலையில் உள்ள அரசிகளும் இருந்திருக்கிறார்கள்.

எமது காலத்தில் கூட தமது சேவைகளால் சாதனை படைத்த பெண்களைக் காண்கின்றோம். பெண் அடிமைகளாக நடத்தப்பட்டிருப்பின் இந்தச் சாதனையாளர்கள் உருவாவது எப்படி.

திறமைவளம் இருந்தும் அதனை வெளிக் கொணர நிதிவளம் இல்லாததால் முடங்கிப் போய் காணப்படுவோரை சங்கங்கள் கை கொடுத்துத் தூக்கி விடவேண்டும். வசதியற்ற குடும்பங்களுக்கு நிதியுதவிகளை வழங்கி சுயதொழில்களை ஊக்குவித்து அவர்களின் திறமையால் உருவானவற்றை சந்தைப்படுத்தி அவர்களின் திறமைகளை பகிரங்கப்படுத்துவதுடன் அக்குடும்பங்களின் பொருளாதார வசதிகளையும் பெருக்க வேண்டும்-

இவ் விழாவில் மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளை உதவி முகாமையாளர், தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் தா.தியாகமூர்த்தி, சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம், கிராம அலுவலர் திருமதி ச.சுந்தரலிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர். (202-207)

# கதிர்காமர் கொலை வழக்கில் பிரபாகரன் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 13

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலைச் சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் உட்பட ஆறுபேருக்கு எதிராகக் கொழும்பு உயர் நிதிமன்றத்தில் சட்டமா அதிபர் நேற்றுமுன்தினம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்தார்.

2005 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 12ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் லக்ஷ்மன் கதிர்காமரைக்கொலை செய்வதற்காக கிளிநொச்சியிலும், கொழும்பிலும் சதிசெய்தமை, கொலைக்கு உடந்தையாக இருந்தமை, விநோதன் என்பவரோடு சேர்ந்து கொலைச் செயலை ஒப்பேற்றியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் இவ்வழக்கில் சுமத்தப்பட்டுள்ளன. (சி)

# மட்டு. உள்ளூராட்சித் தேர்தல் மூலம் வரலாற்றுச் சிறப்புப் பயணம் ஆரம்பம்!

## ஜனாதிபதி கூறுகிறார்



மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க பயணத்தின் தொடக்கமாகத் திகழ்கின்றனர்.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெற்றிகரமாக நடத்த உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்து ஜனாதிபதி வெளியிட்டுள்ள விசேட அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தேர்தலில் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகள் பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதற்கும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கும் முன்னோடியாகத் திகழ்வார்கள் என்று நம்புகிறேன்.

சுமார் இரண்டு தசாப்தங்களுக்குப் பின்னர் கிழக்கில் ஜனநாயகத்தை நிலைநாட்டும் மகோன்னத பணியை நிறைவேற்ற உதவிய அரசியல் கட்சிகளுக்கும், வேட்பாளர்களுக்கும், வாக்காளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

அத்துடன், முப்படையினர், பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள், தேர்தல் ஆணையாளர் மற்றும் மாவட்டச் செயலாளர் ஆகியோருக்கும் நன்றி கூறுகிறேன்.

தேர்தலை வெற்றிகரமாக நடத்த முடிந்தமை ஜனநாயகத்தை மதிக்கும் அனைவருக்கும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அனைத்து இன மக்களும் சுதந்திரமாக வாழக்கூடிய பின்னணியொன்றை உருவாக்குவது அரசின் பிரதான கடமையாகும்- என்றும் ஜனாதிபதி அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

## தியான வகுப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச்13

யாழ்.சிவலிங்க யோககேந்திரா நிலையத் தினர் நடத்தும் யோகாசன தியான வகுப் புகளின் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வகுப்புகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு திருநெல்வேலி பழங்கிணற்றடிப்பிள்ளையார் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

# வாக்காளர் அட்டைகளை ஆயுதக்குழு தலா ஆயிரம் ரூபாப்படி வாங்கியது!

## குற்றம் சுமத்துகின்றார் ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.



கொழும்பு, மார்ச் 13

அரசுடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழு கிழக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் ஒவ்வொன்றிற்கும் தலா ஆயிரம் ரூபா கொடுத்து ஆயிரக்கணக்கான வாக்காளர் அட்டைகளை வாக்காளர்களிடமிருந்து வாங்கியெடுத்தும் சில வாக்காளர்களிடமிருந்து அவற்றைப் பலவந்தமாகப் பிடிங்கியெடுத்தும் தமது வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்குப் பெட்டிகளை நிரப்பியது என்று ஐ.தே. கட்சியின் எம்.பியான ஜயலத் ஜயவர்த்தன குற்றம் சாட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்தத் தேர்த லில் அரசுடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழு வன்முறைகளில் ஈடுபட்டிருக்கின்றது. அக்குழு வாக்காளர்களின் வாக்குரிமையை கேலிக்கூத்தாக்கியுள்ளது.

ஆயிரக்கணக்கான வாக்காளர் அட்டைகளை அக்குழு பணம் கொடுத்து வாங்கியிருக்கின்றது. ஒவ்வொரு அட்டைக்கும் தலா ஆயிரம் ரூபா பணம் அக்குழுவால் வழங்கப்பட்டிருக்கின்றது.

இதற்கான பணத்தை இந்த அரசே வழங்கியது. அது மாத்திரமன்றி பலரின் வாக்காளர் அட்டைகளை அக்குழு பலவந்தமாகப் பறித்தெடுதிருக்கின்றது.

பலர் வாக்களிக்க விடாமல் தடுக்கப்பட்டிருக்கின்றனர். கொலை மிரட்டல்களும் விடுக்கப்பட்டிருக்கின்றன.

இத்தேர்தலுக்காக வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் இறுதிநாளன்று நான் மட்டக்களப்புக்குச் சென்றிருந்தேன். அப்போது ஆயுதக்குழுக்கள் ஆயுதங்களுடன் பொலிஸார் முன்னிலையில் நடமாடியதை நான் கண்டேன்.

பொலிஸார் முன்னிலையில் - பொலிஸாரின் கைகள் கட்டப்பட்ட நிலையில் அரச ஆதரவுடன் அந்த ஆயுதக்குழு கிழக்கில் தேர்தல் நேரத்தில் வன்முறைகளில் ஈடுபட்டது.

வன்முறைகள் எவையும் பதியப்படவில்லை. 'பவ்ரல்' கண்காணிப்பாளர்கள் கூட தாம் கண்டவற்றை மறைத்து அரசிற்கு ஆதரவாகச் செயற்படுகின்றனர்.

வன்முறைகளின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட இந்த உறுப்பினர்களைக் கொண்ட உள்ளூராட்சி சபைகள் சுதந்திரமாக இயங்காது. மக்கள் எதிர்பார்க்கின்ற அந்தச் சேவையும் அவர்களுக்குக் கிடைக்காது.

இத்தேர்தலில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பான தகவல்களை நாம் திரட்டிக் கொண்டிருக்கிறோம். அவற்றை நாம் ஊடகவியலாளர்களுக்குச் சமர்ப்பிப்போம்.

இத்தேர்தல் தொடர்பான உண்மைத் தகவல்களை வெளியிடுகின்ற ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுகின்ற நிலைமையும் உண்டு. இது தொடர்பாகவும் நாம் கவனம் செலுத்துகிறோம் - என்றார். (சி)


**இதோ!**

சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி/54169)


## 'தயட்டகிருல்ல' சீட்டிழுப்பு 17ஆம் திகதி

தேசிய லொத்தர் சபையின் தயட்டகிருல்ல என்ற அதிஸ்டலாபச்சீட்டின் சீட்டிழுப்பு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தவிர்க்கமுடியாத சில காரணங்களால் சீட்டிழுப்பிற்கான திகதி ஒத்திவைக்கப்பட்டது.

எதிர்வரும் 17ஆம் திகதி இந்தச் சீட்டிழுப்பு இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கொள்வனவு செய்திருந்த தயட்டகிருல்ல சீட்டுக்கள் புதிதாக அறிவிக்கப்பட்டிருக்கும் சீட்டிழுப்பிற்கு செல்லுபடியாகும் எனவும் அதுமட்டுமன்றி எதிர்வரும் 17ஆம் திகதி வரை தயட்ட கிருல்ல சீட்டுக்களை கொள்வனவு செய்யலாம். எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

## கூட்டம்

யாழ்.பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் தலைமையில் யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது. (202)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலையின் சக ஆசிரியை
திருமதி சி.வசந்தகுமாரி
அவர்களின் மாமன்
**சின்னன் சின்னத்தம்பி**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்ப உறவுகளின் துயரில் நாமும் பங்கேற்பதோடு அவரின் ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நலச் சேவைகள் சங்கம்,
யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்.
(சி/551809)

## 7ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 31 - 01 - 1919

மறைவு 01 - 03 - 2001

**அமரர் கதிரன் முதலி**

திதி:பூர்வபக்க ஷஷ்டி (13.03.2008)

பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
அன்புடனே எமை வளர்த்து ஆளாக்கி
அறிவு பலவூட்டி அகிலமதில் வாழவைத்து
ஆண்டவன் அடியில் அணைந்து விட்டீர்!
ஆண்டு பல சென்றாலும் ஆறாது எம்துயரம்!
மாறாது உம்நினைவு எம்மனதில் என்றென்றும்.

விடத்தற்பளை வீதி,
உசன், மிருசுவில்.

குடும்பத்தினர்.

(சி-551799)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.12.2006இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 01. | யாழ்.பிரதான வீதி-104 | 2008.03.29<br>2008.03.30<br>2008.04.05<br>2008.04.06<br>2008.04.07<br>&<br>2008.04.08 | மக்கள் வங்கி, யாழ். கன்னாதிட்டி-284 |
| 02. | சேவைநிலையம், உரும்பிராய் | | |
| 03. | சாவகச்சேரி-110 | | |
| 04. | சேவைநிலையம், கொடிகாமம் | | |
| 05. | யாழ்.பல்கலைக்கழகம்-162 | | |
| 06. | சேவைநிலையம், திருநெல்வேலி | | |
| 07. | யாழ்.கன்னாதிட்டி-284 | | |
| 08. | சேவைநிலையம், இணுவில் | | |
| 09. | யாழ்.ஸ்ரான்லி வீதி-030 | | |
| 10. | சேவைநிலையம், மானிப்பாய் | | |
| 11. | காங்கேசன்துறை-031 | | |
| 12. | சேவைநிலையம், மல்லாகம் | | |
| 13. | அச்சுவேலி-107 | | |
| 14. | சங்கானை-108 | | |
| 15. | சுன்னாகம்-109 | | |
| 16. | வல்வெட்டித்துறை-141 | | |
| 17. | நெல்லியடி-106 | | |
| 18. | பருத்தித்துறை-285 | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/551803)

உதவிப் பொதுமுகாமையாளர்
வடவலயம்,

## 23ஆவது ஆண்டு நினைவலைகள்



**அமரர் துரைசிங்கம் சரவணன்துரை**

(மாணவன், அச்சுவேலி மத்திய கல்லூரி)

மலர்வு 27.04.1971

உதிர்வு 13.03.1985

அன்புமொழி பேசி அனைவரையும் மகிழ வைத்து
பண்புடனே நீ வளர்ந்து பயன் தருவாய்
என்றிருந்தோர்
அகவை பதின்மூன்றில் ஆண்டவனே அழைத்து
விட்டான்
அன்று முதல் இன்றுவரை அழுகின்றோம் உன்
நினைவால்
ஆண்டு இருபத்திமூன்று ஆனாலும் மீண்டும் ஒரு
நாள்
வாராயோ! எம்மிடத்தே சரவணா! சரவணா!!

திருச்செந்தூர்,
நாவலம்பதி, அச்சுவேலி.

அப்பா, அம்மா,
பெரியம்மா
குடும்பத்தினர்.

(சி/551796)

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கோடரிக் காம்புகளாகும் தரப்புகள்

இலங்கையின் பாரம்பரிய - பூர்வீக - குடிகளுள் ஒன்றான தமிழ் இனத்தின் அபிலாஷை அல்லது வேணவா மூன்று மூலாதாரக் கோட்பாடுகள் மூலம் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

அவை:- தமிழரின் தாயகம், தமிழரின் தேசியம் மற்றும் தமிழரின் தன்னாட்சி அதிகாரம் அல்லது சுயநிர்ணய உரிமை.

அதிகாரப் பகிர்வுக்கான அல்லது பிரிந்து சென்று தனியரசு அமைப்பதற்கான ஈழத் தமிழர்களின் இன்றைய கிளர்ச்சியின் அடிப்படையாக விளங்குபவை இந்த மூன்று விடயங்களும்தான்.

இந்த மூன்று அம்சங்களையும் அடியோடு அழித்துத் துவம்சம் செய்வதன் மூலம் தமிழினத்தை அடிமைப்படுத்தி, அவர்களின் தேசிய உரிமைகளை நிராகரித்து, பௌத்த - சிங்களத் தனித்துவ மேலாண்மையை இந்த இலங்கைத் தீவில் ஏகபோக உரிமையாக நிலைநிறுத்தி விடலாம் எனக் கனவு காண்கின்றது தென்னிலங்கை.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர் தாயகத்தின் புவியியல் விஸ்தீரணத்தைத் துண்டாடிச் சிதைத்து -

ஒன்றுபட்ட ஒரு தேசிய இனக் கட்டமைப்பாகத் தமிழ் இனம் விளங்குவதற்கு அத்திபாரமான அடிப்படைகளை ஒவ்வொன்றாகத் தகர்த்து -

தமிழரின் தன்னாட்சி உரிமையை மறுத்து, தான் போடும் எலும்புத் துண்டுப் பிச்சைகளை நன்றி விசுவாசத்தோடு வாலாட்டி ஏற்கும் புல்லுருவிகளைக் கொண்டு, அதிகாரப் பரவலாக்கம் செய்துவிட்டதாக உலகுக்கு மாயப்படம் காட்டி -

தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக் கோரிக்கைகளை அடியோடு நிர்மூலமாக்கி விடலாம் என்பதே சிங்களத் தலைமைகளின் தந்திரோபாய மூலமாகும்.

இந்தப் பின்புலத்தில்தான் -

முதலில் தமிழரின் தனித்துவ இருப்புக்கு ஆதாரமான மொழி உரிமை பறிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து கல்வி உரிமை, வேலைவாய்ப்பு உரிமை என்பன மறுக்கப்பட்டன.

பின்னர் பாரம்பரிய நிலங்கள் மீதான சொத்துரிமைக்கும், காணி உரிமைக்கும் ஆப்பு வைக்கப்பட்டது.

அதன் தொடராக சமய, பண்பாட்டு உரிமைகளுக்கு ஊறு விளைவிக்கப்பட்டது.

அந்த வரிசையில் இப்போது யுத்தம், கெடுபிடிச் சட்டங்கள் ஆகியவற்றின் பெயரால் தமிழரின் வாழ்வியல் உரிமையே கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றது.

இந்த உரிமை மறுப்புகளுக்கும், பறிப்புகளுக்கும் அரசுத் தலைமை பல்வேறு கருவிகளைக் காலத்துக்குக் காலம் பயன்படுத்தி வந்திருக்கின்றது.

தமிழரின் வாழ்வியல் கட்டமைப்பை அழித்துச் சிதைப்பதற்கு ஆரம்பத்தில் வேளைக்கு வேளை இனக்கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அவற்றின் மூலம் பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டு, அவர்களின் பெருந்தொகைச் சொத்துகள் சூறையாடப்பட்டு, நிர்மூலமாக்கப்பட்டு, அழிக்கப்பட்டமை மட்டுமல்லாமல், சிங்களப் பேரின வெறி தொடர்பான ஓர் அச்சுறுத்தல் அல்லது பீதி, பயம், திகில் ஏற்படுத்தும் மிரட்டல் உணர்வைத் தமிழர் மனங்களில் நிரந்தரமாக விதைக்கும் மேலாதிக்கச் சிந்தனைக்கும் செயல்வடிவம் கொடுக்கப்பட்டது.

தென்னிலங்கை எதேச்சாதிகாரம் தமிழினத்தை அடக்கி, ஒடுக்குவதற்குக் காலத்துக்குக் காலம் கையில் எடுத்த மற்றொரு கருவி சட்டமாக்கும் அதிகாரமாகும்.

சிங்களக் கொடுங்கோன்மையின் இனவாத மேலாதிக்கம் அரசோச்சும் நாடாளுமன்றத்தை, குடியியல் ரீதியான பெரும்பான்மை என்ற அட்சரகணிதக் கணக்கை வைத்துக்கொண்டு இதற்கு வசதியாக - வாய்ப்பாக - பயன்படுத்தியது தென்னிலங்கை.

சிறுபான்மை இனங்களுக்கு எதிரான - அவர்களின் நியாய பூர்வமான உரிமைகளைப் பறிக்கின்ற - அநீதியான சட்ட மூலங்கள் இங்குதான் யாக்கப்பட்டன. தமிழ்த் தேசிய இனத்தின் தலைவிதியையும் தானே தீர்மானிக்கின்ற அடக்குமுறைஅரசமைப்புகளைத் தமிழரின் சம்மதமோ, ஒப்புதலோ இன்றி, அவர்கள் மீது பலவந்தமாகத் திணிக்கும் நடவடிக்கை வரை சகல ஜனநாயகக் கேலிக் கூத்துகளுக்கும், சட்ட அநியாயங்களுக்கும் இலங்கை நாடாளுமன்றமே மையக் களமாகவும் ஊற்றுக்கண்ணாகவும் விளங்கியது.

ஈழத் தமிழர்களின் தனித் தாயகத்தைக் கூறு போட்டுப் பிரித்துத் துண்டாடும் பௌதிக நடவடிக்கையைத் தமிழர் தாயகத்தில் திட்மிட்ட சிங்களக் குடியேற்றங்களும், இனக் கலவரங்கள் மூலமான அச்சுறுத்தலும் ஆரம்பத்தில் முன்னெடுத்தன என்றால், இப்போது அதே செயற்பாடு நாடாளுமன்றப் பெரும்பான்மையுடன் கூடிய சட்ட வல்லாதிக்கம், அதற்கு அமைய இயங்கும் நீதித்துறை மற்றும் படைப்பல நடவடிக்கை ஆகியவற்றின் ஆதரவோடு மேற்கொள்ளப்படுகின்றது.

தமிழினத்தின் தனித்துவத்தைச் சிதைக்கும் தனது ஒரே சிந்தனை இலக்குக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்கு இப்போது நேரடியாகத் தனது படைப்பலத்தை இராணுவச் செயற்பாடுகள் மூலம் - 'பயங்கரவாதத்தை ஒடுக்கும் நடவடிக்கை' என்ற பெயரில் - ஒப்பேற்றுகின்றது கொழும்பு அரசு.

'இலங்கைக்கு சுதந்திரம் அளித்தல்' என்ற நோக்கில், அதுவரை இலங்கையைத் தனது காலனித்துவப் பிடிக்குள் வைத்திருந்த பிரிட்டன், அப்பிடியைக் கைவிட்டு இலங்கைத் தீவின் சிங்களப் பெரும்பான்மையினரிடம் அரசியல் அதிகாரத்தைக் கையளித்தமை முதல் இன்று வரையான ஆறு தசாப்த காலத்தில் நடந்தேறிய கொடூரத்தின் சுருக்கம் இதுதான்.

தமிழர் தாயகத்தின் தனித்துவத்தைச் சிதைத்து அழிக்கும் வகையில் பல்வேறு கபடத் திட்டங்களை இவ்வாறு முனைப்புடன் செயற்படுத்தி வரும் கொழும்பின் கைகளில் தெரிந்தோ, தெரியாமலோ சிக்கியிருக்கும் சில தமிழர் தரப்புகள், பிரதேசவாதத்தின் பெயரால் தமிழர் தாயகத்தைத் துண்டாடும் கொழும்பின் சதி எத்தனத்துக்கு கருவிகளாக இருந்து உதவும் வகையில் 'கோடரிக் காம்பு' களாகமாறியிருப்பதே தமிழினத்துக்கு நேர்ந்துள்ள பெரும் சாபக்கேடாகும்.

---

### சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென

## உலக வங்கியால் 40 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டம்; காலக்கெடு முடிந்தபோதும் வேலைகள் முடியவில்லை

யாழ்ப்பாணம்,மார்ச்13

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலக வங்கியால் 40 ஆயிரம் வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு அதற்கான காலக்கெடு கடந்த டிசெம்பர் மாதம் என விதிக்கப்பட்ட போதும் வேலைத் திட்டங்கள் முழுமையடையவில்லை என்று வீடமைப்புத் திட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

உலக வங்கி வீட்டுத் திட்டம் தொடர்பாக 'உதயனுக்குக் கருத்துத் தெிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்:

கிழக்கில் இத் திட்ட வேலைகள் அதிகமாகப் பூர்த்தி அடைந்துள்ளன.

யாழ்ப்பாணத்திலும் ஓரளவு வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளன.

எனினும் பாதிக்கப்பட்ட பலரின் காணிகள் உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ளதால் வீடுகள் அமைப்பதில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை-உயர்பாதுகாப்புவலயத்திற்கு வெளியேயும்முழுமையாகவீட்டுத் திட்ட வேலைகள் இடம் பெறவில்லை.

இதற்குக் கட்டடப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் நிலவும் நெருக்கடியே காரணமாக உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அங்கு எந்தவிதமான வேலைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

அங்கும் கட்டடப் பொருள்களைக் கொண்டு செல்ல முடியாமை மற்றும் யுத்தம் போன்ற காரணங்களால் இந் நிலை காணப்படுகின்றது.

இதனால் ஒதுக்கப்பட்ட நிதி திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது என அஞ்சப்படுகிறது - என்றார். (203)

---

## துணை இராணுவக்குழுவின் செயற்பாடுகளுக்கு சட்ட உரிமை கொடுக்கிறது கிழக்குத் தேர்தல்

### தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,மார்ச்13

அரசினதும், துணை இராணுவக் குழுக்களினதும் தவறான செயற்பாடுகளுக்கு சட்ட உரிமையைக் கொடுப்பதாகவே மட்டக்களப்பு உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் அமைந்துள்ளது என தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப்பேச்சாளர் இராசையா இளந்திரையன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன், இத்தேர்தல் ஜனநாயக முறைப்படி நடத்தப்படவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட இளந்திரையன், நான் மட்டக்களப்பு மண்ணின் மைந்தன். துணை இராணுவக் குழுவின் ஆதரவுடன் இந்த அரசாங்கத்தால் மட்டக்களப்பு களங்கப்பட்டிருக்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

இத்தேர்தலில் பிள்ளையான் குழு பெற்றுள்ள வெற்றியின் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பு மேலும் பலவீனப்படுத்தப்பட்டிருக்கின்றது என்று மனித உரிமைகள் மற்றும் அனர்த்த நிவாரண அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்திருப்பது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட இளந்திரையன் அது தவறான கருத்து என்று மறுத்தார்.

இது ஒரு ஜனநாயக நட வடிக்கையாக அமைந்திருக்கவில்லை. இந்த அரசாங்கம் மேற்கொண்டுள்ள ஜனநாயகத்தை அழிக்கும் ஒரு செயற்பாடாகவே இது அமைந்திருக்கின்றது'' என்றும் குறிப்பிட்ட இளந்திரையன் அரசாங்கத்தினதும் அதன் துணை இராணுவக் குழுவினதும் தவறான செயற்பாடுகளுக்கு சட்ட உரிமையைக் கொடுப்பதாகவே இத்தேர்தல் அமைந்திருக்கின்றது'' என்றும் குறிப்பிட்டார். (50)

---

## இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண விநியோகம் மூன்று மாத காலமாக வழங்கப்படவில்லை

### இதனால் 22ஆயிரத்து 943 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்13

கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 11ஆம் திகதிக்கு முன்னர் குடாநாட்டில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு 3 மாதங்களாக உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவில்லை.

இதன் காரணமாக 22ஆயிரத்து 943 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்களில் பெரும்பாலானவை தொழில் வசதிகள் எதுவும் இன்றி கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றன.

ஜனவரி மாதம் தொடக்கம் இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை. நிவாரணம் வழங்கும் பொறுப்பு கைமாறியுள்ளதாலேயே இதில் தாமதம் ஏற்படுவதாகக் கடந்த மாதம் செயலகத்தில் நடந்த அத்தியாவசிய தேவைகள் தொடர்பான கூட்டத்தில் அரச அதிபர் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:-

இடம்பெயர்ந்தோர் நிவாரணம் இதுவரை காலமும் தேச நிர்மாணத் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு மூலம் வழங்கப்பட்டு வந்தது.

இந்தப் பணி இந்த வருடம் தொடக்கம் மீள்குடியேற்ற அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளது.

நிவாரணம் வழங்கப்படுவதற்கான பொருள்களைக் கொள்வனவு செய்தல் உட்பட அனைத்துப் பணிகளையும் அந்த அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

வேலைகள் அனைத்தும் பூர்த்தியானதும் நிவாரண விநியோகம் மேற்கொள்ளப்படும். நிவாரண விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டாலும் அவை முழுமையாக வழங்கப்படும் - என்று அவர் தெரிவித்திருந்தார்.

அரச அதிபர் இவ்வாறு தெரிவித்து ஒருமாத காலம் ஆகின்றபோதும் நிவாரணம் வழங்குவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (203)

---

## 'வடக்கின் போர்' இன்று ஆரம்பமாகாது மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம்,மார்ச்13

'வடக்கின் போர்' என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 102 ஆவது துடுப்பாட்டம் இன்று ஆரம்பமாக மாட்டாது என்று யாழ் மத்திய கல்லூரி அதிபர் எஸ். பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக இடம்பெற்று வரும் மழை காரணமாக இந்த ஆட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்டம் இன்று நடை ஆரம்பமாகும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (203)

---

## தபாலகம் இடமாற்றம்

சங்கானை,மார்ச்13

சங்கானை பிரதான வீதியில் கடந்த பல வருடங்களுக்கு மேலாக இயங்கி வந்த சங்கானை தபாலகம், தற்போதைய கட்டடத்திலிருந்து 50 மீற்றர் தூரத்தில் இதே முகவரியில் நேற்றுத் தொடக்கம் இயங்கி வருகின்றதென தபாலக அதிபர் கோ.யோகராசா தெரிவித்துள்ளார். (1-29)

---

### நாளை

| | |
|---|---|
| பங்குனி -01 | 14.03.2008 வெள்ளிக்கிழமை |
| திதி: சப்தமி | மு.ப. 08.58 வரை |
| நட்சத்திரம் : | மிருகசீரிடம் பின்னிரவு 06.20 வரை |
| சுபநேரம் : | 06.21 - 07.51 |
| ராகுகாலம் : | 10.51 - 12.21 |

---

### குடாநாட்டுப் பாடசாலைகளில் கற்கும்

## ஜீ.சி.ஈ.சாதாரண தர மாணவர்களுக்கான புத்தகங்கள் முழுமையாக வந்து சேரவில்லை

யாழ்ப்பாணம்,மார்ச்13

குடாநாட்டின் பாடசாலைகளில் ஜீ.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்கு இந்த வருடத்தில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான புதிய பாடத்திட்ட நூல்கள் இன்னும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் தவணை முடிவடைந்த போதும் இவர்களுக்கான புத்தகங்கள் வழங்கப்படாமையால் கற்றல் செயற்பாடுகளை சீராக முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக பாட சாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

ஜி.சி.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான விஞ்ஞானம், கணிதம், வரலாறு, தமிழ் ஆகிய பாடங்களுக்கான புத்தகங்களே இதுவரை மாணவர்களுக்குக் கிடைக்க வில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

சாதாரண தர மாணவர்களுக்கான புத்தகங்கள் இவ்வாறு கிடைக்காமல் உள்ளமையால் அவர்கள் பொதுப் பரீட்சையின் போது பாதிப்புக்களை எதிர்கொள்ளவேண்டி வரும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, தரம் 7 மாணவர்களுக்கான ஒரு சில பாடப் புத்தகங்களும் இதுவரை வந்துசேரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

# மேற்குலகின் கரிசனைகளை அசட்டை செய்தால் இலங்கைக்கு பாரதூரமான விளைவுகள் ஏற்படும்

## கட்டுரையில் எச்சரித்துள்ளது 'நியூயோர்க் ரைம்ஸ்' நாளேடு

மேற்குலகத்தின் மனித உரிமைகள் தொடர்பிலான கரிசனைகளுக்கு சிறிலங்கா முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்று 'நியூயோர்க் ரைம்ஸ்' நாளேடு எச்சரித்துள்ளது.

'நியூயோர்க் ரைம்ஸ்' நாளேட்டில் வெளியாகியுள்ள அந்தக் கட்டுரையின் விவரம் வருமாறு -

கடந்த 25 ஆண்டுகளாக இந்து சமுத்திரத்தின் குட்டித்தீவில் நிலவிவரும் அழுக்கான போரினால் உலகநாடுகள் பல தமது கரங்களால் இந்தத் தீவைப் பற்றிப் பிடித்துக்கொள்ள முயற்சித்துள்ளன.

உலகெங்கிலும் வசித்து வரும் புலம்பெயர் தமிழர்கள் - பிரிவினைவாத பயங்கரவாதிகளுக்கு மிக முக்கிய நிதியுதவிகளை வழங்கி வருகின்றனர்.

இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வழங்கப்படவேண்டிய நிதியுதவியே இவ்வாறு வழங்கப்படுகிறது.

அரசாங்கம் போரினை முன்னெடுப்பதற்கு வெளிநாட்டுச் சக்திகளின் உதவிகளை எதிர்பார்த்துள்ளது.

சீனாவினால் சிறிலங்கா அரசாங்கத்திற்கு வழங்கப்படும் உதவிகள் காரணமாக இந்தியாவைப் புறகணிக்கக்கூடிய ஒரு நிலையும் மனித உரிமைகள் தொடர்பான அனைத்துலகத்தின் கருத்துக்களை அலட்சியம் செய்யக்கூடிய ஒரு போக்கும் தற்போது காணப்படுகிறது.

5ஆண்டுகாலமாக நீடித்த போர்நிறுத்த உடன்படிக்கை ரத்துச் செய்யப்பட்டு, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முன்னகர்வுகளில் சில வெற்றிகளை சிறிலங்கா அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ளது.

இந்தப் போர் முன்னகர்வுகளின்மூலம் மனித உரிமைகள் மீறப்படுவதாக சிறிலங்காவுக்கு எதிராக பரவலாகக் குற்றம் சுமத்தப்படுகிறது.

இதனால் அமெரிக்கா உள்ளிட்ட சில முக்கிய வளங்களிடமிருந்து போர் ஆதரவு மறுக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் சிறிலங்காவில் கடத்தல்களோ அல்லது ஊடக அடக்குமுறையோ இடம்பெறவில்லை என்று தெரிவிப்பதில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர்.

சிறு - சிறு சம்பவங்களைத் தவிர பாரியளவிலான சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்று வெளிக்காட்டிக் கொள்ள முற்படுகின்றனர்.

**உதவிகள் மட்டுப்படுத்தப்பட்டன**

சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகள் முக்கியமாக அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், கனடா போன்றவற்றிடம் கோரப்படும் உதவிகளை மட்டுப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் இதற்குப் பதிலாக கிழக்கு நாடுகளின் உதவிகளைக் கோரவுள்ளதாகவும் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கொஹன்ன தெரிவித்துள்ளார்.

புதிய உதவி வழங்குவோர் அண்டை நாட்டவர்கள், அவர்கள் வித்தியாசமான அணுகுமுறைகளைக் கொண்டவர்கள்.

''ஆசியர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று மற்றவருக்கு கற்பித்துக் கொடுக்கமாட்டார்கள்.'' ''தொடர்புகளைப் பேணுவதில் சிலமுறைகள் உள்ளன. சில வேளையில் ஒரு சிறிய கலந்துரையாடல் அதனை விடுத்து ''இதை இப்படிச் செய்ய வேண்டும்'' என்று புதிய உதவி வழங்குவோர் சுட்டிக்காட்டமாட்டார்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு என்ற வகையைச் சார்ந்தோர் என்பதை அவர்களே உறுதிப்படுத்திக் கொண்டுள்ளனர்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் கனடா போன்ற நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கமாகவே நோக்கப்படுகின்றது.

இந்த நிலைமை அவர்களது நிதி திரட்டல் நடவடிக்கைகளுக்கு மிகவும் பாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும்.

இதேவேளை, சீனா சிறிலங்காவுக்கான உதவிகளை பல மடங்கு அதிகரித்துள்ளது.

சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை சீனா அரசாங்கம் சிறிலங்காவுக்கு கடந்த ஆண்டு வழங்கியுள்ளது.

சிறிலங்காவின் பிரதான உதவி வழங்கும் நாடான ஜப்பானை விஞ்சுமளவுக்கு சீனா நேசக்கரம் நீட்டியுள்ளது.

பெருந்தெருக்கள் அமைத்தல், இரண்டு மின் உற்பத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் மஹிந்தவின் சொந்த ஊரான அம்பாந்தோட்டையில் துறைமுகம் ஒன்றை நிர்மாணம் செய்தல் போன்ற பணிகளுக்கு சீன அரசாங்கம் உதவிகளை வழங்கியுள்ளது.

**தொடரும் ஆயுதக் கொள்வனவு**

சீனாவிடமிருந்தும் சீனா ஒத்துழைப்பு நாடான பாகிஸ்தானிடமிருந்தும் சிறிலங்கா ஆயுதக் கொள்வனவையும் மேற்கொள்கிறது.

தெற்காசியப் பிராந்தியத்தில் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்துவதன் மூலம் நன்மையடைவதே சீனாவின் முக்கிய தந்திரோபாயமாகக் கருதப்படுகின்றது. இந்தியா மீதே சீனா அதிக கரிசனை காட்டுகின்றது.

சிறிலங்காவின் போர் முன்னகர்வுகளின் போது நேரடியான இந்தியாவின் உதவி இந்தியாவில் இருக்கும் தமிழர்களை ஆத்திரமூட்டக்கூடும்.

மறுபுறத்தில் சிறிலங்கா அரசாங்கம் மீது மேற்கொள்ளப்படும் அழுத்தங்களை சீனாவுக்கும் சிறிலங்காவுக்கும் இடையிலான நேசக்கரத்தை மேலும் வலுப்படுத்தும் என்ற ஓர் இக்கட்டான சூழ்நிலையை இந்தியா எதிர்கொண்டுள்ளது.

இலங்கைப் பிரச்சினை தொடர்பான இந்தியாவின் பங்களிப்புத் தொடர்பில் மிகக் குறைந்த வாய்ப்புக்களே உள்ளன என்று இலங்கைக்கான இந்திய அமைதி காக்கும் படையின் முன்னாள் தளபதி ஜெனரல் அசோக்குமார் மேத்தா தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் சிறிலங்காவுக்கான உதவிகளும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதாக சிறிலங்கா வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

**இந்திய அரசின் உதவி**

சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை இந்திய அரசாங்கம் உதவி வழங்கியுள்ளது.

சிறிலங்காவில் நிலக்கரி மின் நிலையமொன்றை அமைக்கும் பணிகளை இந்தியா ஆரம்பித்துள்ளது.

இந்தியத் தகவல் தொழில்நுட்பத்துறை முதலீட்டாளர்களை சிறிலங்காவில் முதலீடு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்புத் துறையிலும் முதலீடு செய்யுமாறு இந்திய முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வாஷிங்ரனைப் போன்றே புதுடில்லியும் சிறிலங்காவுக்கான நேரடியான இராணுவ உதவிக் கதவுகளை மூடியுள்ளது.

எனினும், தமது புத்திசாதுரியமான இராஜதந்திர முன்னகர்வுகளின் மூலம் மறைமுகமான இராணுவ உதவிகளை வழங்க முடியும்.

குறிப்பாக கடற்பரப்பில் மேற்கொள்ளப்படும் ஆயுதக் கடத்தல்களை தடுப்பதன் மூலம் இதனை மேற்கொள்ளலாம்.

20 ஆண்டுகளுக்கு முன்னர் பிராந்தியத்தின் அதிகாரப்பலம் இந்தியாவை மையமாக வைத்தே காணப்பட்டது. எனினும், தற்போது இந்தியாவின் பின்வழியாக சீனாவும் தனது காத்திரமான பங்களிப்பின் மூலம் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளத் தொடங்கியுள்ளது.

**சீனாவின் இராஜதந்திரம்**

இந்தியத் துணைக்கண்டத்திற்கு அண்டைய நாடுகளின் துறைமுக வழிகள் தொடர்பாக ஒரு பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ள சீனா அதீத முனைப்பு காட்டுவதாக சிங்கப்பூரின் நேங்யாங் தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தின் அனைத்துலக உறவுகளுக்கான பேராசிரியர் சீ. ராஜாமோகன் சுட்டிக்காட்டுகிறார்.

இந்து சமுத்திரத்தின் முக்கிய பாத்திரமாகத் தன்னை நிலைப்படுத்திக் கொள்வதில் சீனா அதிக சிரத்தை காட்டி வருவதாக அவர் மேலும் குறிப்பிடுகிறார்.

இதன் மூலம் சிறிலங்கா போன்ற நாடுகளுக்கு அதிகமான வாய்ப்புகள் கிட்டியுள்ளன.

''தற்போது பல சிறிய நாடுகள் இந்தியாவின் தந்திரோபாயங்களில் பாதிப்புக்களை ஏற்படுத்த சீனாவை ஒரு பகடைக் காயாக பயன்படுத்துகின்றன. இதன் மூலம் மனிதஉரிமைகள் தொடர்பான விடயங்கள் மூடி மறைக்கப்படுகின்றன'' என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்திற்கான தெற்காசிய ஆய்வாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

1990-களில் பர்மாவில் ஜனநாயகம் நிலைத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதில் இந்தியா அதிக கவனம் எடுத்துக் கொண்டது.

சீனாவின் இராணுவ நிர்வாகம் குறித்து உன்னிப்பாக அவதானித்து வந்தது.

தற்போது சிறிலங்கா தொடர்பான சீனாவின் நிலைப்பாடு குறித்து மிக கரிசனை காட்டி வருகின்றது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அதிகாரம் தொடர்பான கரிசனையாகவே இதனை ஆய்வாளர் மீனாட்சி கங்குலி விதந்துரைக்கிறார்.

இந்த வரிசையில் அண்மைய போட்டியாளராக ஈரானைக் குறிப்பிடலாம்.

கடந்த வருட இறுதிப் பகுதியில் இலங்கைக்கு 1.6 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவிகளை ஈரான் வழங்கியுள்ளது.

அடிப்படையாக ஈரானிய எண்ணெய் வளத்தைப் பெற்றுக் கொள்வதாகவே இந்த கடனுதவியை ஈரான் வழங்கியுள்ளது.

எனினும்அமெரிக்காவின் உதவிகள் கிடைக்காமை குறித்து சிறிலங்கா மிகுந்த வருத்தத்துடனேயே காணப்படுகிறது.

**இலங்கை - அமெரிக்கா இடையே மனக்கசப்பு**

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள்கண்காணிப்பகத்தை சிறிலங்காவில் நிறுவுவதற்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்தனை காரணமாக இரு நாடுகளுக்கும் இடையில் மனக்கசப்பு நிலவுகின்றது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பரின் அண்மைய சிறிலங்காப் பயணத்தின்போது நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் சிறிலங்கா அரசாங்கம் ஆத்திரமடைந்தது. ஜெனிவாவிற்கான சிறிலங்கா பிரதிநிதியூடாக வெளியிடப்பட்ட கண்டன அறிக்கைகள் சிறிலங்கா ஊடகங்களில் வெளியாகின.

அரசாங்கத்திற்கு சார்பான 'தி ஐலண்ட்' நாளேட்டின் ஆசிரியர் தலையங்கமொன்றில் மிகக் கடுமையாக இந்த விவகாரம் விமர்சிக்கப்பட்டிருந்தது.

**வன்முறைகளுக்கு அரசே பொறுப்பு**

மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடந்த வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் இலங்கையில் நிகழும் காணாமற் போதல்களுக்கு அரசாங்கமே பொறுப்புச் சொல்ல வேண்டும் எனத் தெரிவித்திருந்தது.

அதே நாளில் அனைத்துலக சுயாதீன ஆணைக்குழுவினரும் தமது பணிகளை இடைநிறுத்திக் கொள்வதாக அறிவித்திருந்தனர்.

போதியளவு ஒத்துழைப்பு வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை அந்த அமைப்பு முன்வைத்திருந்தது.

எனினும், சட்டமா அதிபர் திணைக்களம் வெறும் நபர்களைக் கொண்டு இந்த ஆணைக்குழுவை மீண்டும் நிறுவுவதற்கு திட்டமிட்டிருப்பதாக தெரிவித்திருந்தது.

மேற்குலகத்தின் மனித உரிமைகள் தொடர்பான கரிசனைகள் குறித்து அவ்வளவு முக்கியத்துவம் தற்போது காட்டுவதில்லை.

எனினும், இந்த நிலைமை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

அரசாங்கத்தின் இந்த துணிகரமான செயல் நாட்டின் பொருளாதாரத்தை மிக மோசமாகப் பாதிக்கும், ஏற்கனவே பணவீக்கம் மிக உயர்ந்த நிலையில் காணப்படுகிறது.

சிறிலங்கா அரசாங்கம் சில வலுவான அனைத்துலக சக்திகளின் நன்மதிப்பை இழந்து வருகின்றது.

குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக முன்னுரிமை இந்த ஆண்டுடன் முடிவுக்குக் கொண்டுவரப்படவுள்ளது.

எனினும், சீனா எவ்வளவு காத்திரமான பங்களிப்பை வழங்கிய போதிலும் இன்னும் சிறிலங்காவின் பிரதான வர்த்தக மையங்களாக ஐரோப்பிய நாடுகளே திகழ்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை என்று சொமினி சென்குப்தா தெரிவித்துள்ளார் - என்றுள்ளது.


**வரவேற்பு விழா-2008-03-13**

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்விப்பணிப்பாளராக 2008.03.10 இல் கடமையேற்ற

**திருமதி அ.வேதநாயகம்**

அவர்களின் கல்விப்பணி சிறக்க பெருமகிழ்வுடன் வரவேற்கின்றோம். வாழ்த்துகின்றோம்.

காலம் :- இன்று (2008.03.13) வியாழக்கிழமை மு.ப. 9மணி

இடம் :- பாடசாலை மண்டபம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்

(71970)





அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

967 நீலம்

வெற்றி இலக்கங்கள்



துலாம்

08 12 33 49

11-03-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 4674171 - 4689777

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 340,076 | 10/- | 3,400,760/- |
| 2 இலக்கங்கள் | 31,186 | 20/- | 623,720/- |
| 1 இல. + லக்கினம் | 30,893 | 30/- | 926,790/- |
| 2 இல. + லக்கினம் | 2,817 | 100/- | 281,700/- |
| 3 இலக்கங்கள் | 850 | 500/- | 425,000/- |
| 3 இல. + லக்கினம் | 61 | 5,000/- | 305,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 7,362,970/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 405,893 | | 8,386,470/- |



இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 5570150 க்கு மேற்பட்ட சீட்டிழுப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 மார்ச் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 4681830-4-20 |
| பொலன்னறுவை | 4680068-0-62 |
| மட்டக்களப்பு | 4682802-5-09 |
| கம்பஹா | 4684839-9-76 |
| கொழும்பு | 4680628-1-11 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொம்பனித்தெரு, கொழும்பு 02

# மோசமான மனிதஉரிமை மீறல்களுக்காக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கை -

மஹிந்த ராஜபக்ஷ அரசின் நிர்வாகத்தை 'சிங்கள மேலாதிக்க ஆட்சி' என்ற பெயரில் அழைக்கவோ அல்லது 'பெரும்பான்மைச் சிங்களத்திற்கும் சிறுபான்மைத் தமிழருக்கும் இடையிலான இனப் போரில் அந்த ஆட்சி மூழ்கிவிட்டது' எனச் சுட்டிக்காட்டவோ தவறியிருந்தாலும், அந்த அறிக்கையின் வாசகங்கள் அத்தகைய உணர்வு பூர்வ நிலைக்கு நெருக்கமானவையாகவே அமைந்திருக்கின்றன என ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

'மிகமோசமான பயங்கரவாதிகளான விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து தன்னுடைய ஆள்புல ஒருமைப்பாட்டையும், இறைமையையும், ஜனநாயகக் கட்டமைப்பையும் காப்பாற்றும் தீவிர இராணுவ யுத்தம் ஒன்றில் இலங்கை ஈடுபட்டிருக்கின்றது' - என்பதைக் குறிப்பிடாமல் அப்படியே தவிர்த்துள்ள இந்த அறிக்கை, இலங்கையின் மனித உரிமைகளை பேணாமல் மீறும் மோசமான செயற்பாட்டைக் காரசாரமாகக் கண்டித்திருப்பது, புதிய செய்தி ஒன்றைக் கூறுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

மனித உரிமைகளை மதிக்கும் அரசின் போக்குத் தொடர்ந்து வீழ்ச்சி கண்டு வருகின்றது. ஆயுதப் பிணக்கு மோசமடைந்தமை இதற்கு ஒரு பகுதிக் காரணமாக இருக்க லாம்.

படுகொலைகள், காணாமற் போதல் போன்ற மோசமான மனித உரிமை மீறல்களில் பெரும்பான்மையாகப் பாதிக்கப்பட்டவர்கள் நாட்டின் முழு சனத்தொகையில் 16 வீதத்தைக் கொண்டுள்ள தமிழர்களில் இளம் ஆண்களே.

அரச முகவர்களினால் மேற்கொள்ளப்படும் சட்ட விரோதப் படுகொலைகள், இனந்தெரியாத சூத்திரதாரிகளால் மேற்கொள்ளப்படும் கொலைகள், அரசியல் உள்நோக்கம் கொண்ட படுகொலைகள், அரசுடன் சேர்ந்து இயங்கும் துணைப்படைகளினால் சிறுவர்கள் படைக்குச் சேர்க்கப்படுதல், காணாமற்போதல், கண்மூடித்தனமான கைதுகள் மற்றும் தடுத்து வைப்புகள், மோசமான சிறை நிலைமைகள், நீதியான பொது விசாரணை மறுக்கப்படல்,அரசின் ஊழல் நடவடிக்கைகள், வெளிப்படையற்ற ஒளிவு மறைவான செயற்பாடுகள், மத சுதந்திரங்களை மறுத்தல், நடமாட்டத்துக் கான சுதந்திரங்களை மறுத்தல், சிறுபான்மை யினருக்கு எதிரான இனப் பாகுபாடு ஆகியவை குறித்து நம்பகரமான அறிக்கைகள் வெளிவந்துள்ளன.

## குடாநாட்டில் நிலைமை சீர்கெட்டுள்ளது

பொதுமக்களுக்கு எதிரான ஆயுதத் தாக்குதல்கள், சித்திரவதைகள், ஆள்கடத்தல், ஆள்களைப் பணயம் வைத்தல், கப்பம் அறவிடல் போன்றவற்றை இராணுவம், பொலிஸ் மற்றும் அரச சார்புத் துணைப் படைகள் விசேட சட்ட விலக்களிப்பு வசதிகளுடன் வகைதொகையின்றி முன்னெடுத்தமை குறித்தும் பல அறிக்கைகள் கிடைத் துள்ளன.

நிலைமை மோசமடைந்து செல்கிறது. மிகக் குறிப்பாக அரச கட்டுப்பாட்டில் உள்ள யாழ். குடாநாட்டில்நிலைமை சீர்கெட்டுள்ளது.

அங்கு வருட முடிவில் சட்ட விரோதப் படுகொலைகள் தினசரி நிகழ்வாகிவிட்டன. இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் அவர்களுடன் சேர்ந்த துணைப் படையினருமே இவற்றின் சூத்திரதாரிகள் எனக் கருதப்படுகின்றது.

இவை தொடர்பாக சில கைதுகள் இடம் பெற்றாலும் அதற்கு மேல் எந்த சட்ட நடவடிக்கைகளும் இல்லை. பழைய - முன்னைய - சம்பவங்கள் தொடர்பான வழக்குகள் அங்குள்ள சட்ட முறைமையின்படி தொடர்ந்தாலும் அவையும் மிக மந்தப் போக்கிலேயே அமைந்துள்ளன.

பத்திரிகையாளர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள் உட்பட சிவிலியன்கள் கண்மூடித்தனமாகத் தடுத்து வைத்திருப்பதற்குப் படையினர் தமக்கு கட்டுமட்டற்ற பரந்த அதிகாரங்களை வழங்கும் 2005 ஆம் ஆண்டின் அவசரகாலச்சட்ட விதிகளைப் பயன்படுத்துகின்றனர்.

## புலிகளின் செயல்கள்

வடக்கின் பரந்த பகுதியைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் தொடர்ந்து பொதுமக்களைத் தாக்கி வருகின்றது. சித்திரவதை மற்றும் கண்மூடித்தனமான தடுத்து வைப்புகளில் ஈடுபடுகின்றது. நீதியான, பொது விசாரணைகளை மறுக்கின்றது. பிறரின் தனித்துவத்தில் அத்துமீறித் தலையிடுகின்றது. பேச்சுச் சுதந்திரம், ஊடக சுதந்திரம், ஒன்று கூடுவதற்கும் கூட்டாக இணைவதற்குமான சுதந்திரத்தில் தலையிடுகின்றது. சிறுவர்கள் உட்பட ஆள்களைப் பலவந்தமாகப் படைக்குச் சேர்க்கின்றது.

முடிந்த வருடத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிரதேசங்களிலும் செயற்பட்டு வந்துள்ளனர். திருமலையில் அவர்கள் அரசியல் உள்நோக்கம் கொண்ட - குறைந்தது ஒரு - கொலையை மேற்கொண்டிருக்கின்றார்கள் கொழும்பில் அரசியல் உள்நோக்கம் கொண்ட ஒரு தற்கொலைத் தாக்குதல், மட்டக்களப்பில் இராணுவ மையம் ஒன்றுக்கு அருகில் ஒரு தற்கொலைத் தாக்குதல், கொழும்பு புறநகரப் பகுதியில் பொதுமக் களின் கடைத்தொகுதி மீதான ஒரு குண் டுத் தாக்குதல், தெற்கில் சிவிலியன் பஸ் கள் மீதான பல குண்டுத் தாக்குதல் கள் எனப் பலவற்றைப் புலிகள் மேற்கொண் டுள்ளனர்.

## அரசுத் தரப்பு அத்துமீறல்கள்

அரசு அல்லது அதன் முகவர்களும் கண்மூடித்தனமான அல்லது சட்டவிரோதக் கொலைகளில் ஈடுபட்டனர் என்பதற்கு நம்பகரமான அறிக்கைகள் கிடைத்துள்ளன.

கடந்த ஆண்டில் அரசுப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் நடந்த மோதல்களில் உயிரிழந்தவர்கள் என மதிப்பிடப்படும் 3 ஆயிரத்து 200 பேரில் சுமார் ஆயிரம் பேர் பொதுமக்கள் என பொது வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சர்வதேச அமைப்புகள் இவற்றில் மூன்றில் ஒரு பகுதி பற்றிய விடயங்களை ஆவணப்படுத்தியுள்ளன.

குடியிருப்புப் பகுதிகள் மீதான பீரங்கித் தாக்குதல்கள், விமானக்குண்டு வீச்சு, நிலக் கண்ணிகள் மற்றும் ஏனைய இராணுவ நடவடிக்கைகள் இத்தகைய சிவிலியன் உயிரிழப்புகளுக்குப் பகுதிக் காரணங்களாக அமைகின்ற போதிலும், பெரும்பாலான சிவிலியன் உயிரிழப்புகள், சட்டவிரோதப் படுகொலைகள் போன்ற தனித்தனிச் சம்பவங்களாகவே நிகழ்ந்துள்ளன என்று சர்வதேச நிறுவனங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

## முறைப்பாடு செய்ய மக்கள் அச்சம்

இத்தகைய படுகொலைகள் குறித்து முறைப்பாடு செய்தால் மோசமான - விபரீத - விளைவுகள் ஏற்படும் என இறந்தவர்களின் உறவினர்கள் அஞ்சுவதால் இத்தகைய படுகொலைகள் பற்றிய பல முறைப்பாடுகள் பதியப்படாமல் போக, நம்பகமான புள்ளி விவரங்களை வெளியிட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் வித்தியாசமான நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட புள்ளி விவ்ரங்களில் பெரும் எண்ணிக்கை வித்தியாசம் காணப்படுகின்றது.

மேலும், அத்தகையோரில் பலர் 'காணாமற் போனோர்' என்ற வகையிலும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் குறித்துப் பின்னர் எந்தத் தகவலுமே கிடைப் பதில்லை.

அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் ஏனைய மனித நேயத் தொண் டுப் பணியாளர்கள் பலர் கொல்லப்பட் டுள்ளனர்.

## அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர் படுகொலை

கடந்த இரு வருடங்களில் சுமார் முப்பது அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் என ஐ.நாவின் மனித நேயப் பணிகளுக்குப் பொறுப்பான கீழ்நிலைச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் மதிப்பீடு செய்திருக்கின்றார். ஆனாலும் அரச சார்பற்ற நிறுவன வட்டாரங்கள் அந்த எண்ணிக்கை 44 என்கின்றன.

உதாரணத்துக்கு, கடந்த ஜூன் 3 ஆம் திகதி உயர் பாதுகாப்புப் பிரதேசமான கொழும்பு ரயில் நிலையத்தில் வைத்து ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் இரண்டு தமிழ்ப் பணியாளர்களைப் பொலிஸ் சீருடையில் வந்த இருவர் கடத்திச் சென்றனர். அந்த இரண்டு செஞ்சிலுவைப் பணியாளர்களின் சடலங்களும் அடுத்த நாள் சுமார் நூறு கிலோமீற்றருக்கு அப்பால் இரத்தினபுரியில் கண்டுபிடிக்கப்பட்டன.

முன்னாள் விமானப் படைத்தளபதியும், தற்போது முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரியுமான டொனால் பெரேராவின் முன்னாள் நிறைவேற்று உதவியாளரும் விமானப் படையின் ஓய்வுபெற்ற விங் கமாண்டருமான நிஷாந்த கஜநாயக்கா என்பவரை குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கைது செய்தனர்.

இந்த கஜநாயக்கா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயா ராஜபக்ஷவினதும், கொழும்பு பொலிஸ் பிரிவிற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அபேவர்த்தனவினதும் வழிகாட்டலிலேயே செயற்பட்டார் என எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தினர் என்று இலங்கை ஊடகங்களில் விரிவாகச் செய்திகள் வெளியிடப்பட்டன.

அரசியல் கடத்தல்கள், கப்பத்துக்காக ஆள் கடத்தல்கள், படுகொலைகளில் ஈடுபட்டனர் என கஜநாயக்கா மீதும் ஏனையோர் மீதும் அரசு குற்றம் சுமத்தியது. ஆனால் இவற்றில் சிரேஷ்ட அதிகாரிகளின் சம்பந்தம் பற்றிய குற்றச்சாட்டுகள் குறித்து அரசு எந்த விசாரணையையும் நடத்தவில்லை.

வருட முடிவில் அந்த விசாரணைகளில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர் சூரியகாந்தி தவராஜா (வயது - 43) டிசம்பர் 14 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அடையாளம் காணப்படாத துப்பாக்கிதாரிகளினால் கடத்தப்பட்டார். பின்னர் சிதைவடைந்த அவரது சடலம் டிசெம்பர் 16ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது.

## மிரட்டலுக்கு துணைப்படைக் குழுக்களை அரசு பயன்படுத்துகிறது

புலிகளுடன் யுத்தம் புரியும் படையினருக்கு உதவி செய்யவும் நாடாளுமன்றிலும் ஊடகங்களிலும் தன்னை விமர்சிப்போரை மிரட்டவும் துணைப் படைக் குழுக்களை அரசு பயன்படுத்துகின்றது.

புலிகளிடம் இருந்து பிரிந்த கருணாவினாலும், பிள்ளையானினாலும் வழி நடத்தப்படும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு (கருணா குழு) கிழக்கிலும் -

அரசின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழி நடத்தப்படும் ஈ.பி.டி.பி. வடக்கிலும் - செயற்படுகின்றன.

கருணா பிரிட்டனுக்குள் நுழைவதற்கு அரசு போலியான ஆவணங்களை வழங்கியதாகக் கூறப்படுகின்றது. கடைசியாக நவம்பர் 2 ஆம் திகதி லண்டனில் கருணா கைதுசெய்யப்பட்டார். ஆனால் இந்தக் கதையில் தனக்குச் சம்பந்தம் ஏதுமில்லை என்று இலங்கை அரசு மறுத்து விட்டது.

இதன் பின்னர் பிள்ளையான் அந்தக் குழுவைப் பொறுப்பெடுத்துள்ளார்.

## எம்.பிக்களின் உறவினர்கள் கடத்தப்பட்டனர்

நவம்பரில் கிழக்கில் எதிர்க்கட்சி எம்.பிக்களின் வீடுகளுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை அரசு விலக்க, பிள்ளையான் குழுவினர் வீடுடைத்துப் புகுந்து எம்.பிக்களின் உறவினர்களைக் கடத்தினர். பிள்ளையானே சம்பந்தப்பட்ட எம்.பிக்களில் ஒருவருக்குத் தானே தொலைபேசி அழைப்பு எடுத்து எச்சரித்தார். 'பட்ஜெட்' வாக்கெடுப்பில் அந்த எம்.பிக்கள் கலந்துகொண்டால் அவர்களின் உறவினர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என அவர் அச்சுறுத்தினார், அதனால் அந்த எம்.பிக்கள் நாடாளுமன்ற வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. அந்த வாக்கெடுப்பில் அரசு வென்றது.அதன் பின் பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். ஆனாலும், அரசு துணைப்படைகளுடனான தனது தொடர்பை அம்பலத்தில் மறுக்கின்றது.

துணைப் படையினர் செயற்படுவதற்கு - பெரும்பாலும் புலிகளின் ஆதரவாளர்கள் என்று சந்தேகப்படுவோருக்கு எதிராக அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு - விசேட சட்டவிலக்களிப்பு சிறப்புரிமை அரசால் வழங்கப்படுகின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு - சிரேஷ்ட அரச அதிகாரிகளின் பணிப்புரைகளுக்கு அமைய செயற்படுவதாகக் குற்றம் சுமத்தப்படும் நிலையில் - இந்த வருடத்தில் காணாமற் போனோர் பற்றிய புள்ளி விவரங்களை வெளியிடவில்லை. எனினும் 2006 இல் அரசியல் நோக்கம் கொண்ட 345 ஆள்கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றன என அது கூறியிருந்தது. இந்த வருடம் அது பெரும் எண்ணிக்கையில் அதிகரித்துள்ளது. சகவாழ்வு மன்ற அறிக்கையின்படி காணாமற் போனோர் எண்ணிக்கை 880 ஆகும்.

காணாமற்போனோர் விவகாரத்தில் பாதிக்கப்பட்டோர், இச்சம்பவங்களில் இலக்கத்தகடற்ற வெள்ளை வானில் வந்த - ஆயுதமேந்திய - தமிழ் பேசுபவர்களே ஈடுபடுகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.அரசு பொதுவாக இது குறித்து விசாரணை செய்யத் தவறியுள்ளது.

விடுதலைப்புலிகளினால் சிறுவர்கள் படையணிகளில் சேர்க்கப்படுவது, குறைவடைந்துவருவதாக 'யுனிசெவ்' தெரிவிக்கின்றது.

கருணாகுழு தொடர்ந்தும் சிறுவர்களை படையணிகளில் சேர்க்கின்றது. பலவந்தமாக அச்சுறுத்தி வன்முறைகளை பயன்படுத்தி அவர்கள் இதனை மேற்கொள்கின்றனர் . - என்று உள்ளது.

(அ-உ)

# ஊர்காவற்துறை நீதிமன்றில் குடும்பஸ்தர் சரண்

யாழ்ப்பாணம், மார்ச் 13

உயிர் அச்சுறுத்தல் காரணமாக வேலணையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று சரண் அடைந்தார்.

வேலணை கிழக்கைச் சேர்ந்த 28 வயதுடைய குடும்பஸ்தரை, அவரது பெற்றோர் ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவன் முன் முன்னிலைப்படுத்தினர்.

காவலில் வைத்து வாக்குமூலம் பெற்ற பின் இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ-1)

# இணுவில் இந்துவில் கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

இணுவில் இந்துக்கல்லூரியில் புனரமைக்கப்பட்ட மேல் மாடிக் கட்டடத்தின் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 7.45 மணியளவில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வி.சச்சிதானந்தன் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் யுனிசெவ் அமைப்பின் யாழ்.வலய அதிகாரி டயானி அராகி கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

கணித அறையை வலிகாமம் கல்வி வலய தொழில்நுட்ப உத்தியோகத்தர் ந.ஜெயசீலனும் கணனி அறையை யாழ்.மாவட்ட பாடசாலைகள் வேலைகள் பகுதிப் பொறியியலாளர் கு.சிவபாலனும் விஞ்ஞான கூடத்தை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் திறந்துவைக்கவிருக்கின்றனர். (1)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா சுப்பிரமணியம்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கு வங்கியடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சுப்பிரமணியம் நேற்று (12.03. 2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான செல்லையா-இராசமணி தம்பதியினரின் அன்பு மகனும், சறோயினிதேவியின் கணவரும், அமரர்களான கந்தையா - இளையபிள்ளை தம்பதியினரின் மூத்த மருமகனும், தயாபரன் (சுவிஸ்), அமரர் கலைச்செல்வி, அருந்ததி (சுவிஸ்), குருபரன் (ஜேர்மனி) ஆகியோரின் தகப்பனும், கருணாகரன், யோகேஸ்வரி, திருவிளங்கம் (சுவிஸ்), குகா (ஜேர்மனி) ஆகியோ ரின் மாமனாரும், நாகராசா (பிரான்ஸ்), துரைசிங்கம், இராஜதுரை, பத்மினி, கமாலதேவி (சுவிஸ்), மல்லிகா தேவி ஆகியோரின் மைத்துனரும், செந்தூரன், கார்த்திகா, கஜனி, கஸ்தூரி, கார்த்தீபன், திருஜன், திவினா, தர்சன், மதுசன், கிருசன், கஜந் தன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2008) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணியளவில் இணுவில் காரைக்கால் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வங்கியடி,*
*இணுவில் கிழக்கு.*

(71994)

*தகவல்*
குடும்பத்தினர்

## இரத்தினம் வினாயகேஸ்வரன்

வாதரவத்தை, புத்தூரைப் பிறப்பிடமாகவும் கேணியடி வீதி, மீசாலை மேற்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தி னம் - வினாயகேஸ்வரன் 11.03.2008 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-இரத்தினம் தம்பதியினரின் அருமை மகனும், கந்தையா தவராசா - மகேஸ்வரி தம்பதியினரின் மருமகனும், கலைமகளின் பாசமிகு கணவரும், கீர்த்திகன் (சாவகச்சேரி - இந்து ஆரம்ப பாடசாலை மணவன்), சஜித்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமிர்தராணி, பவளமலர், கெங்கேஸ்வரன், யோகேஸ்வரன், திலகீஸ்வரன், சசிகலா ஆகியோரின் சகோதரனும், அமிர்தலிங்கம், மகாராசா, வசந்தா, நாகரத்தினமாலா, அன்னலட்சுமி, கோகிலதாசன், பிரகலாதன், திருமகள் ஆகியோரின் மைத்துனரும், நந்தகுமாரின் ஒன்று விட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.03.2008) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.30 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கேணிய்டி வீதி,*
*மீசாலை மேற்கு, மீசாலை.*

(சி/551825)

*தகவல்*
க.தவராசா (மாமனார்).

# கிழக்கில் நடந்த மோசடித் தேர்தலை அம்பலப்படுத்தத் தொடர் போராட்டங்கள்

## நாடு முழுவதும் நடக்கும் என ரணில் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 13

கிழக்கில் இருந்து புலிகள் முற்றாக விரட்டியடிக்கப்படாத நிலையிலும் பிள்ளையான் குழுவிடமிருந்து ஆயுதங்கள் களையப்படாத நிலையிலுமே மட்டக்களப்பு உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு நடத்தியது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

மோசடி நிறைந்த இத் தேர்தல் முடிவுகளை எதிர்த்து ஐ.தே.கட்சி நாடு முழுவதிலும் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு உண்மையை அம்பலப்படுத்தும் என்றும் அவர் அறிவித்தார்.

மட்டு. உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளை எதிர்த்து ஐ.தே.கட்சி நேற்று ராஜகிரியவில் உள்ள தேர்தல் செயலகத்திற்கு முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கிழக்கில் இன்னும் முழுமையாக ஜனநாயகம் ஏற்படவில்லை. அங்கிருந்து புலிகளை விரட்டிவிட்டோம் என்று அரசு தெரிவித்த போதிலும் அங்கு இன்னும் புலிகள் நிலை கொண்டுள்ளனர்.

புலிகளிடமிருந்து விலகிய பிள்ளையான் குழுவினர் ஆயுதங்களுடன் நடமாடுகின்றனர். அவர்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்று மக்கள் அரசைக் கேட்டனர்.

அரசு மக்களின் அந்த வேண்டுகோளை நிறைவேற்றாமல் அதற்கு மாறாகப் பிள்ளையான் குழுவினருடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டது.

அரசின் இவ்வாறான செயற்பாட்டால் அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையில் எந்த வித்தியாசமுமில்லை என்பது தெளிவாகிறது. புலிகள் போலவேதான் அரசும் செயற்படுகிறது.

கிழக்கில் தேர்தலை நடத்துமாறு மக்கள் கேட்கவில்லை. அங்கு பிள்ளையான் குழுவிடமிருந்து ஆயுதங்களைக் களையுமாறும் முழுமையான ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறுமே மக்கள் அரசைக் கேட்டனர். அரசு அவ் வேண்டுகோளை நிறைவேற்றத் தவறித் தேர்தலை நடத்தியது.

இத் தேர்தல் மோசடிகள் நிறைந்த ஒன்று. இதை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். இதற்கு எதிராக நாம் நாடு முழுவதிலும் போராட்டங்களை நடத்துவோம். - என்றார்.

நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் அதிக எண்ணிக்கையான ஐ.தே.கட்சி எம்.பிக்களும் பொதுமக்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(சி)

# புத்தளம் தமிழ்த் தம்பதி சுட்டுக்கொலை

புத்தளம், மார்ச்.13

புத்தளம் தொகுதியிலுள்ள வடக்கு எல்லைப்புற பகுதியான இலவங்குளம் கிராமத்திலுள்ள இறால்மடு பகுதியில் இளம் தமிழ்தம்பதிகள் சுட்டும், வெட்டியும் படுகொலைச் செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தில் வவுனியாவை பிறப்பிடமாகக் கொண்ட சக்திவேல் பிள்ளைராஜா (வயது 22) அவரது மனைவி நிரஞ்சலா(வயது20) ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் ஆவர். அவர்களது வீட்டுக்கு நேற்று அதிகாலை 2 மணியளவில் சென்ற ஆயுதம் தரித்தவர்களே இவர்களை சுட்டுவிட்டு தப்பிச் சென்றவர்கள் என கூறப்படுகிறது.

இச் சம்பவம் இடம் பெற்ற போது இவர்களது இரண்டு பிள்ளைகள் வீட்டில் இருந்துள்ளனர். எனினும் அவர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மன்னாரில் மூவர் கைது

மன்னார், மார்ச்.13

மன்னார், தலைமன்னார் பிரதான வீதியிலுள்ள - வீதி அபிவிருத்தி சபை தொடர்பான வேலைத் திட்டங்களை ஒப்பந்த அடிப்படையில் செய்துவரும் - தனியார் நிறுவனம் ஒன்றின் களஞ்சிய அறையில் வெடிபொருள்களை மறைத்து வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் அந்த நிறுவனத்தின் பணியாளர்கள் மூவர் நேற்று முன்தினம் மாலை 3.45 மணியளவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்த நிறுவனத்தின் மேற்பார்வையாளர்களான போஜியா றொனி நந்தகுமார் (வயது - 29), எட்வேர்ட் பொபி மாக்கஸ் (வயது - 26) மற்றும் குறூஸ் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

(சி)

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணைமேயராக பிரதீப் மாஸ்டரை நியமிப்பது என்றும் கட்சி தீர்மானித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற தேர் தலில் பத்மினி ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தமை தெரிந்ததே.

(அ-1)

## கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து வாகனங்களையும் துருவித் துருவி ஆராய்ந்த படையினர், அவர்களது உடைமைகள் அனைத்தையும் கொட்டி ஒவ்வொன்றாகப் பரிசோதனை நடத்தினர். மோப்ப நாய்கள் மூலமாகவும் சோதனை நடத்தப்பட்டது. குறிப்பாக வாகனங்கள் அனைத்தினதும் பாகங்கள் ஒவ்வொன்றாக பரிசோதிக்கப்பட்டன.

சுமார் ஒரு மணிநேரமாக சோதனைச் சாவடியில் தடுத்து நிறுத்தப்பட்டு இத்தகைய கெடுபிடிகளைச் செய்ததால் விசனமுற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் படையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

படையினரும் கடுமையாக வாக்குவாதத்தில் ஈடுபட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடுமையான கெடுபிடிகளுக்குப் பின்னர் பிற்பகல் 4 மணியளவிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கொழும்பு நோக்கிப் பயணிக்கப் படையினர் அனுமதிவழங்கினர். கூட்டமைப்பு எம்.பிக்கள் 13 பேரும் மாமனிதர் சிவநேசனின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்வதற்காக வன்னிக்குச் சென்றிருந்தமை தெரிந்ததே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் ''மாமனிதர்'' சிவநேசனின் படுகொலை குறித்தும் இத்தகைய கெடுபிடிகள் குறித்தும் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கவுள்ளனர்.

(அ)

## மடுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் மூன்று தடவைகள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

அப்பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகளின் மூன்று தளங்களை இலக்கு வைத்தே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் இப்பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகளே படைநகர்வைத் தடுத்து வருகின்றனர் என்றும் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(சி)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் வெளியிட்டன.

புதுடில்லியின் நிலைப்பாட்டை இந்தியத் தூதுவர் தெளிவுபடுத்தினார் என்றும் -

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தமது உத்தேச நடவடிக்கைத் திட்டத்தை இலங்கை ஜனாதிபதி, இந்தியத் தூதுவருக்கு விளக்கினார் என்றும் மேலும் கூறப்பட்டது.

அச்சமயமே வடக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபையும், கிழக்கு மாகாண சபையும் ஏக காலத்தில் இயங்கக்கூடிய வகையிலான கால அட்டவணைப்படி தாம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார் என ஜனாதிபதி குறிப்பிட்டார் என்று அறியவந்தது.

கிழக்கு மாகாண சபைக்கான உத்தேச தேர்தல் நடவடிக்கையும், வடக்கு மாகாணத்துக்கான இடைக்கால நிர்வாக சபை அமைக்கும் செயற்பாடும் புதுடில்லியின் ஆசீர்வாதத்தோடு முன்னெடுக்கப்படுவதால் அவை பற்றிய ஒழுங்கு ஏற்பாடுகள் குறித்து காலத்துக்குக் காலம் - உத்தியோகப் பற்றற்ற முறையிலேனும் - புதுடில்லித் தரப்புக்கு ஜனாதிபதி தகவல் தெரிவித்து வருகின்றார் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டன.(உ)

## கதிர்காமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ப்பத்திரத்தை அடுத்தே இந்த ஆறு பேருக்கும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மற்றும் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் உட்பட ஆறு பேரையும் நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றை நீதிபதி குமுதினி விக்கிரமசிங்கவால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(முன்னர் வந்த செய்தி 7ஆம் பக்கத்தில்)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன.தமிழ் மொழி பேசும் இரண்டாயிரம் பொலிஸாரை பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக 175 பொலிஸார் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அவர்களில் 50 பெண் பொலிஸாரும் அடங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மொழியில் தேர்ச்சியுள்ளவர்களைச் சேவையில் அமர்த்தி சிவில் நிர்வாகத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கையும் கிழக்கில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. - என்றார் அவர்.

(சி)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்த வேண்டும் என மேற்குலக நாடுகள் வற்புறுத்திவருகின்றன.

ஆடை ஏற்றுமதி உட்பட முக்கிய விடங்களில் இலங்கைக்கான வரிச் சலுகையைத் தொடர்வதற்கு இதை முன் நிபந்தனையாக அந்த நாடுகள் விதித்து அதற்குக் காலக்கெடுவும் கொடுத்துள்ளன.

ஆனால் ஏற்கனவே நாட்டின் சட்டப்படி அங்கீகரிக்கப்படாத சர்வதேச பட்டயங்களை நாட்டின் தலைமை அல்லது அரசு தம்பாட்டில் ஏற்றுக்கொள்வதாக அறிவித்தாலும் கூட, அவற்றைச் சட்டரீதியாக நடைமுறைப்படுத்த இயலாது என்று உயர்நீதிமன்றம் வேறு வழக்குகளில் திட்டவட்டமாக அறிவித்துவிட்டது.

இந்தச் சூழ்நிலையிலேயே இந்தப் பட்டயத்தை இலங்கை ஏற்றுக்கொள்ள முன்னர், அது குறித்து உயர் நீதிமன்றத்திடமே கருத்துக் கேட்டு, நிலைமையைத் தெளிவுபடுத்த ஜனாதிபதி முயற்சிக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(உ)


## கண்ணீர் அஞ்சலி

யா/இமையாணன் அ.த.க. பாடசாலையின் ஸ்தாபகரும், நீண்ட காலம் அதிபருமாக விளங்கியவரும் இமையாணனைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வாழ்விடமாகவும் கொண்ட

### அமரர் வெள்ளையன் வல்லிபுரம்

*(அகில இலங்கை சமாதான நீதிவான்)*

அவர்களின் மறைவுக்காய் உளமுருகி அஞ்சலிக்கிறோம். ஆசிரியராய், அதிபராய், செயல்வீரனாய், முன்னோடியாய் விளங்கி தன் ஊருக்கும் உறவுகளுக்கும் முகவரியாகி, முகமுமாகி நின்று எமைப் பிரிந்த ஆத்மாவை உளமுருகி அஞ்சலிக்கின்றோம்.

'தனகத் தோட்டம்''
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(71992)

## மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் தேவஸ்தானம்

### அறிவித்தல்

**17.03.2008 பங்குனி முதலாம் திங்கள் உற்சவம் காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரையும் நடைபெறும்.**

**வியாபாரக்கடைகள் 15.03.2008 சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு ஏலத்தில் கொடுக்கப்படும். பணம் முழுவதையும் உடன் கட்டி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.**

**சி.சிவகுரு, தர்மகர்த்தா.**

(71990)

## கேபிள் தொலைக்காட்சி இணைப்பாளர்களுக்கு ஓர் அன்பான உரிமையான வேண்டுகோள்

''தமிழன்'' தொலைக்காட்சி ஒளிபரப்பில் ஞாயிறு தோறும் இரவு சுமார் 10.30 க்கும் 11.45 க்குமிடையில் டாக்டர் பஸ்லுர் ரஹ்மான் (M.B.B.S, M.D (ACU)) அவர்களினால் வாரந்தோறும் வழங்கப்படுகின்ற மிகவும் சக்தி வாய்ந்ததும், பாரிய நன்மையை விளைவிக்கப் போகின்றதுமான மருத்துவ நிகழ்ச்சியை உங்கள் இணைப்பினூடாக மக்களிற்கு வழங்கி அதன் மூலம் மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், சகலதுறை மருத்துவ விரிவுரையாளர்கள், சகலதுறை டாக்டர்கள், அத்துடன் பொதுமக்கள் எல்லோரும் அறியாமையிலிருந்து விருதலையடைந்து பாரிய விழிப் புணர்வு ஏற்பட வழி வகுத்ததில் பங்காளிகளாகுங்கள். நிச்சயம் இறைவன் உங்களை ஆசீர்வதிப்பார். ஒன்று மட்டும் உண்மை, இந்த நிகழ்ச் சியைப் பார்க்கத் தீர்மானித்திருப்பவர்களுக்கு மிகப் பெரிய ஆச்சரி யம் காத்திருக்கிறது.

டாக்டர் K. இரகுராம்
உரும்பிராய் வடக்கு (மடத்தடி).

(71979)

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் கனகரத்தினம்



திருநெல்வேலி தெற்கு, 17/8, பிள்ளை யார் வீதியைச் சேர்ந்த இராமலிங்கம் கனகரத்தினம் 08.03.2008 சனிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சற்குணராசா (லண்டன்) மற்றும் கருணானந்தன், பத்மலோசனி, பத்மலீலா (கனடா), ஸ்ரீரமணானந் தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சித்திரா (லண்டன்), சாந்தி (கொழும்பு), இரகுநாதன் (கல்வியியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்), அகிலன் (கனடா), கலாவதி (கனடா) ஆகி யோரின் மாமனாரும், காலஞ்சென்ற இராமலிங்கம் - வள்ளியம்மை ஆகியோரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற கந்தையா - மீனாட்சியின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான தாமலிங்கம், சோமசுந்தரம், சண்முகராசா மற்றும் சுப்பிரமணியம், மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், முத்துலிங்கம் இராசமணி மற்றும் இராசம்மா ஆகியோரின் மைத்துனரும் சுரேஷ்குமார், இந்துஷா, தனுஷா, அபிலாஷா, ஜனகன், உமையவன், பிரசான், பிரவீத் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2008) வியாழக்கிழமை பி.ப 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க.கருணானந்தன்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.